புதுக்கோட்டை ஸமஸ்தான

தேசிய யுத்த முன்னணி நிலையம்.

பிரசுரம்] 1944-ம்௵ டிசம்பர்௴ 2உ [ந. 226

தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

—20-ம் பக்கம் பார்க்க.

பிரஸங்கம் CCXXVI.

மிஸ்ட்டர் சர்ச்சிலின் எச்சரிக்கை.

யுத்தம் சீக்கிரம் முடிவுபெற்றுவிடும் என்று மிதமாக இருக்கக்கூடாதென்று இந்த சபைக்கும் இந்த நாட்டிற்கும் நான் எச்சரிக்கை செய்கிறேன். அது சீக்கிரம் முடிவடையக் கூடும். ஆகிலும் யுத்த முடிவில் துவக்கக்கூடிய உலக சரித்திரத்திலேயே புதிய சட்டமான ஒரு சர்ச்சையைப்பற்றி இப்பொழுதே நாம் கவனம் செலுத்தக்கூடாதென்று நினைக்கிறேன்.

சில மாதங்களுக்கு முன் ஜெர்மன் போர் ஜனவரி–பிப்ரவரி மாதங்கள் வரையில் நீடிக்குமென்று சொல்லி அக்காலத்தில் அதிக நம்பிக்கை கொள்ளக்கூடாதென்று நான் சொன்னேன்.

சபையைச்சுற்றிப் பார்த்தபொழுது சிலரிடம் ஏமாற்றம் காணப்பட்டதுபோல் தோன்றிற்று. யுத்தம் வசந்தகால முடிவிலோ அல்லது வேனிர்கால ஆரம்பத்திலோ முடிவடையுமென்று உடன் காலத்தில் நான் இச்சபைக்கு அறிவித்ததுண்டு. நான் முன்சொன்ன கால அளவை இப்பொழுது மாற்றிச் சொல்லுவதாக உத்தேசமில்லை.

ஒருக்கால் சம்பவங்களைப்பொருத்து மாறுதல் செய்யவேண்டுமென்று நினைத்தால் வேனிர்காலம் என்ற பதத்திற்கு அடுத்தாற்போலுள்ள ஆரம்பகாலம் என்பதைத்தான் எடுத்துவிடுவேன்.

நான் பிரிடிஷ் மக்களையும் இச்சபை மெம்பர்களையும் நன்கு அறிவேன். ஆகிலும் நிலமை கெடுதலாக இருக்கிறதென்று சொல்லுவதை மட்டும் அவர்கள் சகித்துக்கொள்ளுவார்கள்.

ஆனால் அதிக அபாயம் நேரிடாதபடி மனுஷ்ய யத்னத்தில் அவைகளைச் சொல்லக்கூடுமானால், அந்த விஷயங்களை வெளியிடுவதுதான் சாவதானமாக இருக்கும். அநேக சந்தர்ப்பங்களில் இச்சபையில் அநேகப் போர்முனைகளில் நமக்கு நெருக்கடியான நிலமை ஏற்பட்டிருக்கிறதென்றும் நமக்கு நல்ல நிலைமை ஏற்படுமென்றும், அவைகள் இன்னும் கெடுதலாக மாறக்கூடுமென்றும் சொல்லியே மெம்பர்களின் உழைப்பையும் ஆர்வத்தையும் அதிகப்படுத்தியிருக்கிறேன்.

இப்பொழுது யுத்தம் நமக்கும் நம்முடைய தேசிய வாழ்க்கைக்கும் முக்கியத்துவமுள்ளது. மற்றெந்த வேலையையும் இதற்கப்புறம்தான் கவனிக்கவேண்டும்.

எதிரியின் போரில்தான் நம்முடைய கவனத்தைச் செலுத்தவேண்டும். அவனுடைய எதிர்ப்புச் சக்தியை முறியடிக்கவேண்டுமானால் பிரிட்டனும், அமெரிக்காவும், மற்ற நேசதேச நாடுகளும், விடுதலை பெற்ற நாடுகளும் மகத்தான முயற்சிகளை எடுத்துக்கொண்டு பூராப் படைகளையும் திரட்டவேண்டும். சோர்வடைவதற்கு இது தருணமல்ல.

நமது கக்ஷியில் சேர்ந்துள்ள அநேக நாடுகள் கடைசிகாலத்தில்தான் நம்முடன் நட்புக் கொண்டிருக்கிறார்கள். ஒருவன் சோர்வற்றிருக்கும் பொழுதும், ஒருவனுக்கு ஆயாசம் ஏற்படும்பொழுதும், மிகவும் பகட்டான, ருசிகரமான, சிறந்த நடவடிக்கைகளும் மறை முகமாக இருக்கும்பொழுதும், பத்திரிகை தலையங்கங்கள் ஒன்றன்பின் ஒன்றாக உண்மைகளை பகிரங்கப்படுத்தும் பொழுதுதான் முடிவு நமக்கு வெகு தூரத்திலிருப்பதாக புலப்படுகிறது.

இந்த நாட்டிலுள்ள நாம் இதுவரையில் அளவற்ற, அசோஷ்யமான சலனம் செய்யக் கூடிய சக்தியை வெளிக்காட்டியதுபோல், இன்னும் அதிகமான பிரயத்தனங்களைச் செய்து வரவேண்டும்.

நாம் சோர்வடையவில்லை என்று இப்பொழுது வெளிப்படுத்த வேண்டும். ஆகிலும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். யுத்த ஆரம்பத்தில் தேசத்தில் படையெடுப்பு பயம் ஏற்பட்டு ஒவ்வொருவரும் கௌரவமான முறையில் உயிர் துறக்கவேண்டுமென்று நினைக்கும் காலத்தில் அதிக பிரயாசை எடுத்துக்கொள்ளுவது ஒருவிதம். ஆறாவது வருஷ யுத்தசமயத்தில் அதேவிதமாக சோர்வன்னியில் பிரயாசை எடுத்துக்கொள்ளுவது மற்றொரு விஷயம். மற்றொரு புறத்தில் 1940, 1941-ம் வருஷங்களில் நமக்கு நெருக்கடியான சமயம் ஏற்பட்ட பொழுது நமது ஜனங்கள் முன்வந்ததுபோல், நாம் படையெடுத்துவரும் ஜெர்மனியிலுள்ள மக்களும் உத்தம பக்ஷமான ஊக்கத்துடன் போர்புரிவார்களென்பதையும் மறந்துவிடக் கூடாது. யுத்த முயற்சி அவசியம்தான் நம் முன் நிற்கிறது. ஜெர்மன் போர் முடிவடைந்த பின் ஜப்பானிய யுத்தம் பாக்கியிருக்கிறதென்பதை நாம் மறந்து விடக்கூடாது.

வார யுத்தச் செய்திகள்

(A)-முக்கியமான சம்பவங்கள்.

21—11—44 (செவ்வாய்க்கிழமை).	பிரான்ஸ் 1-வது படை அற்புதமான ஒரு நடவடிக்கையில் ரைன் நதியை அடைந்தது.
	செம்படை ரீகா வளைகுடாவிலுள்ள ஒஸல் தீவின் தற்காப்புகளை ஊடுருவிச் சென்றது.
	நேசதேசப்படைகள் அல்பேனியாவின் தலைநகரமான டிரானாவை விடுவித்தன.
22—11—44 (புதன்கிழமை).	நேசதேசப்படைகள் இதாலியில் மாண்டிபார்டினோவைப் பிடித்தன.
	பிரெஞ்சு 1-வது படை பிரான்ஸிலுள்ள மல்ஹௌஸைப் பிடித்தது.
23—11—44 (வியாழக்கிழமை).	பிரெஞ்சுப்படைகள் பெல்போர்ட் பூராவையும் விடுவித்தன.
	ருஷ்யப்படைகள் கிழக்கு ஸெகோஸ்லவேகியாவில் ஒரு புதிய தாக்குதலை ஆரம்பித்தன.
	அமெரிக்கர்கள் பிலிப்பைன்ஸ் தீவில் லெயிடியிலுள்ள விமாவைப்பிடித்தார்கள்.
	நேசதேச விமானப்படைகள் டோக்கியோ பேரில் வெடி குண்டுகளைப்போட்டன.
24—11—44 (வெள்ளிக்கிழமை).	நேசதேசப்படைகள் ஸ்ட்ராஸ்பர்க்கைப் பிடித்தன.
	ருஷ்யர்கள் ரீகா வளைகுடாவிலுள்ள ஓஸல் தீவை விடுவித்தார்கள்.
25—11—44 (சனிக்கிழமை).	பிரிடிஷ் படைகள் மாஸ் நதியை இரண்டு புதிய முனைகளில் அடைந்து விட்டார்கள்.
	நேசதேசப்படைகள் இதாலியில் பாயன்ஸாவின் எல்லைப் புரத்தை அடைந்தன.

(A)-முக்கியமான சம்பவங்கள்—தொடர்ச்சி.

26—11—44 (ஞாயிற்றுக்கிழமை).	ஸர் ஜான் டில்லுக்குப் பதிலாக ஜெனரல் வில்ஸன் அமெரிக்காவிலுள்ள பிரிடனின் ஒன்றுபட்ட காரியா லாயத் தூது கோஷ்டியின் தலைமையை ஏற்றூர். பீல்ட் மார்ஷல் அலெக்ஸாண்டர் மத்தியதரைப் போர் முனையின் உயர்தர கமாண்டர் பதவியை ஜெனரல் வில்ஸனுக்குப் பதிலாக ஏற்றுக்கொண்டார். செம்படை ஸெகோஸ்லவேகியாவிலுள்ள மற்றும் இரண்டு நகரங்களைக் கைப்பற்றிற்று.
27—11—44 (திங்கட்கிழமை).	அமெரிக்க 1-வது சேனையைச்சேர்ந்த படைகள் ஜெர்மனியில் உள்ள ரேனிலிருந்து நான்கு மைல்களுக்குள்ளாக வந்துவிட்டன.

(B)-செய்திச் சுருக்கம்.

மேற்குப் போர்முனை.—சென்ற வாரத்தில் தெற்குப் போர்முனையில் ஆல்ஸாஸ் லோரென் முனையில் ஜெர்மனி நிலைகுலைந்தது. இந்த வாரத்தில் வடக்கு முனையில் கோலோனுக்கு மேற்கில் கடும் போர் நடைபெற்று வருகிறதாகச் சொல்லப்படுகிறது. கோலோனுக்கு வடக்கில்தான் ரூர் என்ற தொழிற்சாலை பிரதேசமிருக்கிறது. இங்கு ஒரு பிரிடிஷ் படையும் இரண்டு அமெரிக்கப்படைகளும் ஈடுபட்டிருக்கின்றன.

(1) **ஹாலந்து.**—மாஸ் நதியின் மேற்குக்கரை எதிரியில்லாமல் சுத்தி செய்யப்பட்டு விட்டது. படைகள் வென்லூவை அடைந்துவிட்டன. நெட்ரிக்கும் ஹொர்ஸ்ட்டும் பிடிபட்டன. எதிரி ரொயர்மாண்டைக் காலிசெய்து விட்டான்.

(2) **பிரிடிஷ் 2-வது சேனை.**—அமெரிக்க 9-வது, 1-வது சேனையுடன் ஒன்றுபட்டு கோலோனை நோக்கி முன்னேறி வருகிறது. கெல்சன்கிர்ச்சனுக்கு வடகிழக்கில் கடும்போர் நடப்பதாகத் தெரியவருகிறது.

(3) **அமெரிக்க 9-வது சேனை.**—கொரான்ஸ்-விலர், கிர்சபார், கொஸ்லார் பிராந்தியங்களிலும் போர் புரிந்து வருகிறது. கோலோனுக்குப்போகும் வழியிலுள்ள ரஸ்தாக்கள் சேரும் ஜங்ஷனான ஜூலிக்கை நோக்கி முன்னேறி வருகிறது. அது எஸ்ச்விலர், பார்மன், மெர்சன் ஹாஸன், கொஸ்லார் முதலிய இடங்களைப்பிடித்து விட்டது. ஆக்கனுக்கு வடமேற்கில் 16 மைல்களிலுள்ள லின்னிச்சுக்கு வடமேற்கில் புதிய தாக்குதலைத் துவக்கிவிட்டார்கள்.

(4) **அமெரிக்க 1-வது சேனை.**—ரூருக்குப்போகும் வழியில் ஆக்கனுக்குக் கிழக்கிலுள்ள ரேனை நோக்கி முன்னேறி வருகிறது. விஸ்விலர், ஹோவன், கூசலின், போர்ஹிம், புட்ஸோன், ஆல்ட்டார்ப் பிரென்ஸ், லாங்கர்வெஹி, ஜுகன்ஸ்டார்ப், மெரோமி முதலிய இடங்கள் பிடிபட்டன.

(5) **அமெரிக்க 3-வது சேனை.**—ஸாரையும் ஜெர்மன் எல்லைச்சரகத்தையும் தாண்டிச் சென்று ஸாருக்கு அப்புறமுள்ள தொழிற்சாலை பிரதேசத்திற்கு அபாயம் உண்டுபண்ணி விட்டன. ஸீக்பிரட் அரணிலுள்ள மெர்ஸிக்கை அது அடைந்து விட்டது. பட்ஸ்டார்ப், டெட்டிங்கன், ஊபிரிஞ்சன், ஸோமி, பிலெயிஸி, அபெரிச், லாங்க்வில்லி, ஸெயிண்டு ஆவோல்ட், ஹுங்கிர்ச், உல்ப்ஸகர்சன்.

(6) **அமெரிக்க 7-வது படை.**—ஸ்டார்ஸ்பர்க்கு பூராவையும் பிடித்துவிட்டது. மொமன் ஷெல்மையும், சால்ஸையும் அது பிடித்தது. அது ரைன் நதியையும் கடந்துவிட்டது.

(7) **பிரெஞ்சு 1-வது படை.**—ரைன் நதியைத்தாண்டி, பெல்போர்டுக்கருகிலுள்ள ஆஸ்பாச், ரோமாக்கினி, டானமெரியைப்பிடித்துவிட்டன.

கிழக்குப் போர்முனை.—ரீகா வளைகுடாவிலுள்ள ஓஸல் தீவு விடுவிக்கப்பட்டது. எஸ்தோனியாவிலுள்ள ருஷ்யக் குடியரசு சுதந்திரமடைந்தது.

மத்திய ஐரோப்பாவில் ஸெகோஸ்லவேகியாவுக்குக் கிழக்கிலுள்ள மலைகளில் போர் துவங்கிவிட்டது. படைகள் சேலா கணவாயை அணுகிவிட்டன. ஹங்கேரியிலுள்ள டோகேயிலிருந்தும், கார்ப்பேதியன் மலைகளிலுள்ள ஓஸாப் பிராந்தியத்திலிருந்தும் இரண்டு புதிய தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டன.

ஸெகோஸ்லவேகியாவில் மிகாலோவ்சியும், ஹுமெனியாவும் பிடிபட்டன. ஹங்கேரியில் டான்யூப் நதியிலுள்ள ஹாட்வான் காஸ்வெல் என்ற தீவும், பெக்ஸ் மோஹாக்ஸும், பாடாசெக்கும் பிடிபட்டன.

பார்ஷல் டிடோ ஆல்பேனிய எல்லைச்சரகத்திலுள்ள புட்வாவையும், கொடாரா என்ற கடற்தளத்தையும், சன்னியாசி மடமுள்ள ராஸ்காவையும் மீட்டார்.

இதாலி.—பாயன்சாவின் எல்லைச்சரத்துக்குப்படைகள் வந்துவிட்டது. எட்டாவது சேனை பாயன்சாவுக்குக் கிழக்கிலுள்ள லாமோனு நதிக்கு வந்துவிட்டது. அது ரஷியை நோக்கி முன்னேறிவருகிறது. சியிசியாலோ, காசலாக்கியோ, மாண்டிபெல்லெடீர், மாண்டிபிகோகா, மாண்டிபிரோனுடி முதலிய இடங்கள் பிடிபட்டன.

பர்மா.—கிழக்கு ஆபிரிக்கப்படைகள் கானிவாவுக்கு மேற்கிலுள்ள கியிகான் என்ற கிராமத்தைப் பிடித்தன. சீனர்கள் செபாங்குக்குக் கிழக்கிலுள்ள மெங்காவையும், மாண்டலேயுக்குப்போகும் வழியிலுள்ள பீன்வேயையும் பிடித்தார்கள். 14-வது சேனையைச் சேர்ந்த துருப்புகள் நான்போனை விடுவித்தன.

பஸிபிக்.—அமெரிக்க சூடர் பறக்கும் கோட்டை விமானங்கள் ஜப்பானின் தலைநகரமான டோக்கியோ பேரில் மூன்று தடவை வெடிகுண்டுகளை வீசின. விமான உற்பத்தி நிலயங்கள் பழுதுபடுத்தப்பட்டன.

ஜப்பானுக்கு வடக்கிலுள்ள மாகுஸாவும் தாக்கப்பட்டது. பிலிப்பைன்ஸில் லெயிடித் தீவிலுள்ள லிமான் பிடிபட்டது.

சைனு.—ஹுனுனிலுள்ள ஹெங்கியாங்கிலிருந்தும், காண்டவிலிருந்தும் முன்னேறிய ஜப்பானியப்படைகள் லூகெனிவில் ஒன்று சேர்ந்து விட்டன. ஆனால் இந்த முன்னேற்றம் வடக்கு குவாங்ஸியிலுள்ள மலைகளில் நின்றுவிட்டது.

சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமான்ங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

19—11—44. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.–போக்குவரத்துகள் ஸப்ளை லயன்கள் *நீஜ்மேகன்* (Nijmegen) *முதல் பெல்போர்ட்* (Belfort) *வரையில் யுத்தம் நடக்கும் அரங்களுக்குபின்.*

ரயில், நதிப்போக்குவரத்துகள்.—*மன்ஸ்டர்* (Munster).

துருப்பு முகாம் ராணுவ நிலயங்கள் துருப்புகள், கவசம் பூண்டவைகள், பீரங்கி ஸ்தாபனங்கள்.—*யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.*

எண்ணெய் சேமிப்புகள் போக்குவரத்து ஸ்தாபனங்கள்.—*மியூனிச்* (Munich), *ஹானு* (Hanau), *உல்ம்* (Ulm).

எண்ணெய்க் கிணறுகள்.—*வான் இக்கல்* (Wanne Eickel).

விமான நிலயங்கள்.—*லெச்பெல்ட்* (Lechfeld), *லெய்பிம்* (Leipheim), *மெங்கன்* (Mengen).

துருப்பு முகாம்கள் இதர இலக்குகள்.—*ஆஸ்திரியா* (Austria), *ஹங்கேரி* (Hungary), *யூகோஸ்லாவியா* (Yugoslavia).

விமானச் சண்டைகளும் தரையிலுள்ள விமானங்களும்.—*கிழக்கு யுத்த அரங்கம் முழுதும் (25 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).*

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய போக்குவரத்துகள் நீர், நில ஸ்தாபனங்கள்.—*ஆர்மாக்* (Ormoc).

பர்மா (Burma).

ரயில்வே தளங்கள்.—*மோக்பாலின்* (Mokpalin).

ரயில்.—*சிண்ட்வின்* (Chindwin).

துறைகள்.—*மார்ட்டாபன்* (Martaban).

ரயில்வே இலக்குகள்.—*ஸியாம்* (Siam).

20—11—44. (திங்கட்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—ரயில்வே ஸ்டேஷன்.—*மான்ப்வி* (Manpwe).

தளவாடக் குவியல்கள்.—*காலின்* (Kawlin).

ரயில்வே தளங்கள்.—*சகேய்ங்* (Sagaing).

எதிரி ரயில், ரஸ்தா ஸப்ளைகள்.—*யுத்த அரங்கம்.*

ரஸ்தா ரயில் பாலங்கள்.–*வென்லூ* (Venloo).

ரயில்வே இலக்குகள்.–*கெம்பன்* (Kempan), *வியார்சன்* (Viersen).

தளவாடக் குவியல்கள்.—*பிர்மாஸென்ஸ்* (Pirmasens).

தோடாச்சியான எண்ணெய்க் கிணறுகள்.—*கில்ஸென்கிர்ச்சென்* (Gelsenkirchen).

ரயில்வே தளங்கள்.–*மன்னிஸ்டர்* (Munster).

இலக்குகள்.—*காப்பெல்ஸ்* (Coblenz), *எய்ஸ்பாடன்* (Aiesbaden), *பான்* (Bonn).

லக்ஷியங்கள்.—ரூர் (Ruhr).

எண்ணெய்க் கிணறுகள்.—பிலெச்சாமர் (Blechhammer).

ரயில்வே.-ஸாராஜிவோ (Sarajevo) விற்கும் பிராடிற்கும் (Brod) இடையில்.

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியத் துருப்புகள், இதர லக்ஷியங்கள்.-லெய்ட்டாவிலுள்ள ஆர்மாக் (Ormoc) வளைகுடா.

பர்மா (Burma).

உதவிகள்.-வட பர்மாவிலுள்ள தரைப்படை நடவடிக்கைகள்.

ரயில்வே தளங்கள்.—சகெய்ங் (Sagaing).

21—11—44. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—எண்ணெய்க் கிணறு இலக்குகள், தொழிற்சாலைகள்-ஹாம்பர்க் (Hamburg), மாக்டிபர்க் (Magdeburg). (73 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன. 53 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

துப்பாக்கி ஸ்தாபனங்கள்.—நெதர்லாந்து (Netherlands).

ஜெர்மன் கப்பற் கூட்டங்கள்.—யூகோஸ்லாவியாவின் வடமேற்குக் கடற்கரை.

எண்ணெய்க் கிணறு ஸ்தாபனங்கள்.—செக்கோஸ்லாவாக்கியா (Czechoslovakia).

போக்குவரத்து லக்ஷியங்கள்.—போ (Po) சமவெளி.

இரவு.—எண்ணெய்க் கிணறு ஸ்தாபனங்கள்—ஸ்டெர்கிரேட் (Sterkrade), காஸ்ட்ரோபிராக்ஸல் (Castroprauxel).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

தூரக்கிழக்கு (Far East).

விமானத் தொழிற்சாலைகள்.—ஓமூரா (Omura).

கப்பற் கட்டுந் துறைகள்.-நாங்கிங் (Nanking).

ராணுவ சேமிப்புகள், ஏற்றிறக்குமதி ஸ்தாபனங்கள்.—ஷாங்கெய்.

பர்மா (Burma).

தொழிற்சாலை இலக்குகள்.—தென் பர்மா (S. Burma).

ஜப்பானியப் போக்குவரத்துகள்.—சிண்ட்வின் (Chindwin).

22—11—44. (புதன்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—எண்ணெய்க் கிணறுகள்—ஹாம்பர்க் (Hamburg), மெர்ஸ்பர்க் (Merseburg).

ஜெர்மன் சேனை தலைமைக் காரியாலயம்.—ஹாலந்து (Holland).

இலக்குகள்.-மியூனிச் (Munich), ஆஸ்திரியா (Austria).

ஸால்ஸ்பர்க்.—(Salzburg).

ரயில்வே தளங்கள்.—ஆஸ்திரியாவிலுள்ள வால்லக் (Vallach).

துருப்பு முகாம்கள், இதர இலக்குகள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

பாதுகாக்கப்பட்ட பட்டணம்.—ஜெர்மனியில் உள்ள டூரேன் (Duren).

எதிரித் துருப்புகள், போக்குவரத்துகள்.-ஜெர்மனியில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய பலமான முனைகள்.—போனின் (Bonin), பாலா (Palau), காரோலைன்ஸிலுள்ள யாப் (Yap).

பர்மா (Burma).

துறைமுகங்கள்.—தென் பர்மா (S. Burma).

கப்பல்கள் மிதக்கும் விமானங்கள்.—தென் பர்மாவில் பல இடங்கள்.

23—11—44 (வியாழக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள்-கெல்ஸென்கிர்ச்சன் (Gelsenkirchen)

துறைமுகம்.—ஏஜியனிலுள்ள காஸ் (Cos).

பின்வாங்கும் ஜெர்மன் துருப்புகள், பாலங்கள் போக்குவரத்துகள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

துருப்பு முகாம்கள் இதர இலக்குகள்.—வட இதாலி (Northern Italy).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும். (70 ஜெர்மன் விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

இரவு.-லக்ஷியங்கள்-ஹனோவர் (Hanover).

இதர இடங்கள்.-கிழக்கு ஜெர்மனி (Eastern Germany), மேற்கு ஜெர்மனி (Western Germany).

விமானச் சண்டைகள்.—ஜெர்மனியில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களுக்குப்பின்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானின் தலைநகரான டோக்கியோ (Tokyo).

ஜப்பானியக் கப்பற் கூட்டம்.—லெய்ட்டி (Leyte).

லக்ஷியங்கள்.—போனின் (Bonin), குரைல் (Kurile), கோப் (Kobe), யோகோ (Yokoha).

பர்மா (Burma).

லக்ஷியங்கள்.-மாண்டலேக்கும் (Mandalay), லாஷியோ (Lashio) விற்கும் இடையில்.

கப்பல்.—மார்ட்டாபன் வளைகுடா.

விமான உதவி.—தரை நடவடிக்கைகள்.

24—11—44. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள்—ரூரிலுள்ள கெல்ஸென்கிர்ச்சனுக்கு அருகிலுள்ள நார்ட்செர்ன் (Nordsern).

போக்குவரத்துகள்.—மேற்கு அரங்கத்தில் எதிரி அணிகளுக்குப்பின்.

பாலங்கள்.—இதாலியிலுள்ள லாமன் நதிக்கு மேல்.

போக்குவரத்துகள், பாலங்கள்.—போ நதி (Po).

இரவு.—பேர்லின் (Berlin).

ஜெர்மனியிலுள்ள லின்ஸ் (Linz).

மியூனிச் (Munich).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய தளங்கள்.—போனின் (Bonin) தீவுக் கூட்டம்.

ஜப்பானிய சைனியங்கள்.—வட பலால் (N. Palaul) தீவுகள், மாரியானஸ் (Marianas), காரோலைன்ஸ் (Carolines).

பர்மா (Burma).

எதிரி சைனியங்கள், துருப்பு முகாம்கள்.—சிண்ட்வின் (Chindwin).

தளவாடக் குவியல்கள்.—அரக்கான் (Arakan).

3 பாலங்கள்.—மத்திய பர்மா (Central Burma).

25—11—44 (சனிக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—எண்ணெய்க் கிணறுகள்.—மெர்ஸ்பர்க் (Merseburg).

சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமித்துமிடங்கள்.—பிங்கென் (Bingen).

தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள்.—ரூர் (Ruhr), லட்ஸென்டார்ப் (Lutzendorf).

தரை இலக்குகள்.—மேற்கு அரங்கம்.

எதிரி ஸப்ளைகள், ரயில் லயன்கள்.—இதாலிய அரங்கத்திற்குப்பின்.

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும்.

(12 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

இரவு.—ராணுவ லக்ஷியங்கள்.—நூரம்பர்க் (Nuremberg).

இதர இடங்கள்.—மேற்கு ஜெர்மனி.

விமான நிலயங்கள்.—ஜெர்மன் அரண்களுக்குப் பின்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய வியாபாரக் கப்பல்கள்.—செபு (Cebu).

ஜப்பானியக் கப்பல்கள், விமான நிலயங்கள்.—லூஸானிலும் (Luzon) அதைச் சுற்றிலும்.

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—மாரியானஸ் (Marianas).

ஜப்பானியர் ஆக்கிரமித்த தீவுகள்.—மார்ஷல்ஸ் (Marshalls);

பர்மா (Burma).

ரங்கூனுக்கருகிலுள்ள காயாக்ஸ் (Kayaukse).

ரயில்வே பாலம்.—ஸாமன் (Samon).

ரஸ்தா போக்குவரத்து.—மத்திய பர்மா (Central Burma).

படகுகள்.—பேஸ்ஸின் (Bassein), நெம்ஸாடா (Nemzada).

விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

20—11—44. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

ருஷ்யா (Russia).

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

21—11—44. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

ருஷ்யா (Russia).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

22—11—44. (புதன்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கையில்லை.

தூரக்கிழக்கு (Far East).

அமெரிக்க சைனியங்கள்.—பிலிப்பைன்ஸிலுள்ள லெயிடி (Leyte).

23—11—44. (வியாழக்கிழமை)

பிரிடன் (Britain.)

ஒரு தகவலும் இல்லை.

ருஷ்யா (Russia).

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

24—11—44. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain),

சில இடங்கள்.—தென் இங்கிலாந்து.

ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

25—11—44. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

26—11—44 (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain),

சில இடங்கள்.—இங்கிலாந்தின் தென்கரை.

ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

யுத்தக் குறிப்புகள்.

மகத்தான போர்கள். ஒவ்வொரு நிமிஷமும் 5,000 வெடி குண்டுகள் போடப்படுகின்றன. ஒவ்வொரு மாதத்திலும் 8 மிலியன் வெடிகுண்டுகள் போடப்படுகின்றன. 3 லக்ஷம் வெடிகுண்டுகள் ஆகனில்மட்டும் போடப்பட்டிருக்கின்றன. பிப்ரவரி மாதம் வரை நீடித்திருக்கக் குவிக்கப்பட்டிருந்த வெடிமருந்துகள், நவம்பர் மாதம் முடியுமுன் உபயோகப்படுத்தப்பட்டன. ஜூன் 6-ம் தேதிமுதல் 10 லக்ஷம் ஜெர்மன் சிப்பாய்கள் நிர்மூலமாக்கப்பட்டார்கள். வெற்றி சீக்கிரமாகக் கிடைக்க வேண்டுமானாலும், அநேக உயிர்களைக் காப்பாற்றவேண்டுமானாலும் இன்னும் அதிகமான வெடிமருந்துகள் தேவை. இவ்விதமாக மேற்குப் போர்முனையில் நடைபெற்றுவரும் மகத்தான போர்களைப்பற்றி ஜெனரல் ஈசன்ஹவர் விவரித்திருக்கிறார்.

நேசதேசத்தாரின் ஆறில் மூன்று சேனைகள் வடக்கு பார்ச்வத்தில் ஒன்று பட்டிருக்கின்றன. இங்குதான் பிரிடிஷ் படைகளின் முக்கியமான முன்னேற்றம் ஏற்பட்டுவருகிறது. இந்தப் பக்கத்திலிருந்துதான் பெர்லினுக்குச் செல்ல சுருக்கமான மார்க்கமிருக்கிறது. இங்குதான் ஜெர்மனி 12 டிவிஷன் படைகளைப் போருக்கு அனுப்பியிருக்கிறது. அவைகளில் பாதிபாகம் பான்ஸர்படைகள். இங்கு போர்முனை 25 மைல் நீளமுள்ளதுதான். ஜெர்மன் அறிக்கை நிலயம் பின்வருமாறு சொல்லுகிறது “இங்கு நடக்கும் மகத்தான போருக்கும் முதல் உலக யுத்தத்தில் நடைபெற்ற மகத்தான போர்களுக்கும் யாதொரு வித்யாசமுமில்லை. அமர்க்களம் பூராவிலும் எங்குபார்த்தாலும் பிளவுகளும் நாசமுமாகக் காணப்படுகிறது.”

கடுமையான அனுபவத்தினாலும் ஹிட்லர் தலைமை வகிக்காததினாலும் ஜெர்மன் படைகள் நிலமை மோசமாகியபின் இறுதிவரையில் போராடுவது பயனற்றதென்று கண்டுபிடித்துவிட்டன. புதிதாக அமைக்கப்பட்ட பிரெஞ்சுப்படை பெல்போர்ட்டைப் பிடித்து ரைன் நதியைத் தாண்டிச் சென்று பிரக்யாதிபெற்றபொழுது ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் படைகளைப் பின்வாங்கிவிட்டார்கள். அதற்கு அருகிலுள்ள கரும் காடுகள் இயற்கையான தற்காப்புகளாக இருக்குமென்றும் அவைகள் எதிரியின் முற்போக்கைத் தடுத்துவிடுமென்றும் எண்ணினார்கள். இவ்விதம் நம்பி, அவர்கள் அங்கிருந்த படைகளை வடக்குப் பக்கத்தில் அபிவிருத்தியடைந்துவரும் ஆங்கிலோ— அமெரிக்கத் தாக்குதலை சமாளிக்க அனுப்பிவிட்டார்கள்.

இந்தப் போர்கள் எதிரிகளின் பூர்ணமான மாரிகாலத் தாக்குதல் என்று ஜெர்மானியர்கள் சொல்லிவந்த போதிலும் இதைவிட பலமான போர்களுக்கு இவைகள் முற்போக்கானவைகள் என்றே சொல்லலாம். இந்த நடவடிக்கைகள் ஜெர்மனியின் கனமான தொழிற்சாலைகளுள்ள ரூர் பிரதேசத்துக்குச் செல்லவேண்டிய லக்ஷியத்துடன் நேசதேசத்தார்கள் எதிரியின் தற்காப்புகளில் பலஹீனமான பாகங்களைக் கண்டுபிடிக்கும் சாவதானமான ஏற்பாடுகள்தான். ஸீக்பிரட் அரணிலுள்ள முக்கியமான ஸ்தானங்கள் நொருக்கப்பட்டுவிட்டன. தற்காப்புகளில் விரிவான வெளிகள் அமைக்கப்பட்டுவிட்டன. ஆகிலும் அந்த அரண் இன்னும் நொருங்கிவிடவில்லை.

ஆகன், மெட்ஸ், பெல்போர்ட், கிலன்கர்ச்சன் முதலியவைகள் பிடிபட்டபோதிலும் ரைன் நதி பல இடங்களில் தாண்டப்பட்டபோதிலும் இந்த வெற்றிகள் அந்தந்த பிரதேசத்தில் கிடைத்த சிறிய வெற்றிகள்தான். போர்முனை பூராவிலும் எதிரிகள் பலமாகத் தாக்கப்பட்டபோதிலும் எல்லா இடங்களிலும் போதுமான முன்னேற்றம் ஏற்படவில்லை.

டெயிலி மெயில் பின்வருமாறு எழுதுகிறது. “மிகையாகச் சொல்லப்படும் எதையும் நீ நம்பிவிட்டால் நீ ஏமாற்றமடைந்துவிடுவாய். இது ஜெர்மனியைப் பின்னால் தாக்குதல் செய்வது போன்றதல்ல. நாம் ஒவ்வொரு கிராமமாகப் பிடித்து முன்னேற வேண்டும். இது இந்த யுத்தத்தின் மகத்தான போரல்ல. ஸ்விட்ஸர்லாந்து முதல் ஹாலந்து வரையில் ஒரே விதமாகக் கடும்போர் நடைபெறவில்லை.

“ஆகையால் அவசரப்பட்டு ஒரு முடிவுக்கும் வரக்கூடாது. ஆகையால் பீரங்கிக்குண்டு வீச்சுகளை மதித்து ஒரு முன்னேற்றத்தின் முக்கியத்வத்தை மதிப்பிடக்கூடாது. நவீன யுத்த முறையில் பலமான தாக்குதலுக்குமுன் பீரங்கிகளை மிகுதியாக பிரயோகம் செய்யும் நடவடிக்கை சகஜமாகிவிட்டது. இது எதிரிகளின் கேந்திர ஸ்தானங்களை அழிக்கக் கூடிய வெடி குண்டு வீச்சு. நேசதேசத்தாரின் முன்னேற்ற யுத்த தந்திரம். ஜெர்மனியின் முன்னணி தற்காப்பு நிலயங்கள் வெடிகுண்டுகளால் சல்லடைக் கண்ணாகத் துளைக்கப்பட்டுவிட்டன. அதைத் தற்காப்புச் செய்கிறவர்கள் பிரமையடைந்து நிற்கிறார்கள். இந்த வெடிகுண்டு வீச்சிலிருந்து நாம் ஊடுருவிச்சென்று விட்டோமென்று புலப்படாது.”

விமான நடவடிக்கை. இதே சமயத்தில் எதிரியின் பின்னணிகளையும் நேசதேச விமானங்கள் இரக்கமன்னியில் தாக்கிவருகின்றன. தினசரி உற்பத்தி நிலயங்களும் போக்குவரத்து மார்க்கங்களும் பழுது பார்க்க முடியாதபடி சீர்கெட்டுவிட்டன என்று கேள்விப்படுகிறோம். ஜெர்மானியர்கள் தங்களுடைய தொழிற் சாலைகளை பத்திரமான இடங்களுக்குக் கொண்டுபோகிறார்கள் ஆனால் எந்தப் பிரதேசமும் நேசதேசத்தாரின் குண்டுவீச்சு வட்டாரத்தைத் தாண்டியிருக்கவில்லை. ஆகிலும் ரூர் பிரதேசத்தில் உள்ள கனமான யுத்த தளவாட தொழிற்சாலைகளை ஜெர்மனி வேறு இடங் களுக்குக் கொண்டு போகக்கூடவில்லை. மனிதர்களையும் யந்திர சாதனங்களையும் அப்புறப் படுத்துவது சுலபமான காரியமில்லை என்று ஜெர்மானியர்கள் அறிந்துவிட்டார்கள். மேலும் ஜெர்மனியின் இருப்புப் பாதை வசதிகள் சீர்கெட்டுப்போய்விட்டன. சமீபத்தில் கிடைத்த தகவல்களிலிருந்து ஜெர்மன் இருப்புப்பாதைத் தொழிலாளர்கள் சகிப்புத் தன்மையின் எல்லையை அடைந்து விட்டார்களென்றும் ஆயாசமடைந்து கலகம் செய்யத் தயாராக இருக்கிறார்களென்றும் தெரியவருகிறது.

வெடிகுண்டு வீச்சுக்குட்பட்ட ஜெர்மன் நகரங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பிய கோயபல்ஸ் நேசதேசத்தாரின் விமான நடவடிக்கை மூலம் மிகுதியான நஷ்டம் ஏற்பட்டிருக் கிறதென்று ஒப்புக்கொள்ளுகிறான். அவன் பின்வருமாறு சொல்லியிருக்கிறான் "இந்த வேனிற் காலமும், இலையுதிர் காலமும் நம்மை இதுவரையிலில்லாதபடி சோதித்துவிட்டது. ஆகிலும் அந்தச் சங்கடம் இன்னும் நீங்கிவிடவில்லை. சந்தேகமற நாம் நேசதேசத்தாரின் விமான நடவடிக்கையையும் நமது பிரச்னைகளில் ஒன்றாகக் கருதவேண்டும். வெறிபிடித்தவர்கள் கடுமையாகப் போராடுவதைத் தவிர நமக்கு வேறுவழியில்லை."

வி வி வி வி வி

ஜெர்மன் உள்நாட்டுப் படை. புதிதாய் அமைக்கப்பட்ட இந்தப் படையும் பயன்பட வில்லை. அந்தப்படையைச் சேர்ந்த சிலர் மெட்ஸுக் கருகில் அமெரிக்கர்களிடம் சமீப காலத்தில் சரண்புகுந்துவிட்டார்கள். தென்கிழக்கில் அவர் களுக்கும் S. S. படைகளுக்கும் சச்சரவு ஏற்பட்டதென்று கேள்விப்படுகிறோம். அவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டுவிட்டபடியால் அவர்கள் இப்பொழுது எஜமான்களை எதிர்த்துப் போராட ஆரம்பிக்கிறார்களென்றும் தெரியவருகிறது. கட்டாயப்படை சேமிப்பு இருதலை யுள்ள ஆயுதம். இதுவரையில் நிராயுதபாணிகளாகயிருந்து பொறுமையுடன் கொடுங்கோன் மையை சகித்துவந்தவர்களுக்கு அவர்களுடைய அபிப்பிராயத்தை வெளிப்படுத்த இது சந்தர்ப் பம் அளித்துவிட்டது. நாஸிக் கக்ஷி அடையாளங்கள் துரிதமாக மறைந்துவருகின்றன. வியன்னாவிலுள்ள பொதுமக்கள் சமாதானம் செய்துகொள்ளும்படி நாஸி மாகாண கவர்னர் களுக்குப் புத்தி புகட்டி வருகிறார்கள். ஒரு கடிதம் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது. எல்லோரும் இப்படித்தான் அபிப்பிராயப்படுகிறார்கள். இதைப்பற்றி வியாக்யானம் சொல்லும் பொழுது மாகாண கவர்னர் பின்வருமாறு தெரிவிக்கிறார். "நாம் சமாதனம் செய்துகொள்ளக் கூடாதென்பதை இந்த எழுத்தாளர் மறந்துவிட்டார். நாங்கள் யுத்தத்தை விரும்பவில்லை. அதை நிறுத்தவும் எங்களுக்குச் சக்தியில்லை."

ஜெர்மன் ரக்ஷகப் படையென்பது 16 வயது முதல் 53 வயது வரையிலுள்ள எல்லா ஆடவர் களும் கொண்ட ஒரு பெரிய ஜனக்கூட்டம். அது மாகாணம் வாரியாக அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு மாகாண கவர்னர்கள் அதிகாரிகள். ஆயுதம் தாங்கிச் செல்லக்கூடிய எவரும் தகுதி யுள்ளவர் என்று சேர்க்கப்படுகிறார்கள். அவர்கள் அங்குமிங்கும் செல்லவேண்டிய சக்தி பெற்றிருக்கவேண்டிய அவசியமில்லை. ஆகையால் இந்தப்படைகள் சலனம் செய்து நடை பெறும் போரில் ஈடுபட லாயக்கற்றவர்கள். அவர்களின் அலுவல்கள் பின்வருமாறு. பின்னணி யிலுள்ள தற்காப்புகளை அவர்கள் தற்காப்பு செய்யவேண்டும். ஊடுருவிவரும் தரைப்படை களை அல்லது ஆகாசமூலமாகவும், கடல் மூலமாகவும் இறங்கும் எதிரிப் படைகளை அவர்கள் சமாளித்து நிற்கவேண்டும். போக்குவரத்து மார்க்கங்களை அவர்கள் காப்பாற்றவேண்டும். சமிக்ஞை, சாரப்படைகளுக்கு அவர்கள் ஆட்களை அனுப்பவேண்டும். நேசதேசப் படைகள் ஊடுருவிச் சென்று முன்வந்தால் அவர்கள் ஜெர்மன் படைகள் திருத்தியமைத்துக்கொள்ளும் வரையில் எதிரிகளைத் தாக்கிக் காலஹரணம் செய்துவரவேண்டும்.

வி வி வி வி வி

பிச்சை வாங்குவது. ரக்ஷகப் படைகளுக்கு ஞாயிறன்றுதான் பயிற்சி அளிக் கப்படும். அவர்களுக்கு அளிக்கப்படும் ஆயுதங்களும் முஸ்தீப்புகளும் சிலாக்யமானவையல்ல. ஜெர்மன் அதிகாரிகள் ஆயுதங்களையும் முஸ்தீப்பு களையும் தரும்படி பிச்சையெடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஒரு மாகாண கவர்னர் பின் வாரு வேண்டுகோளை விடுத்திருக்கிறார்."

"பயிற்சிக்கும் சேவைப் படைக்கும் அழுத்தமான ஆடைகளும், ஜோடுகளும் இதர முஸ்தீப்புகளும் தேவைப்படும். ஆகையால் பொதுமக்கள் உபயோகப் படுத்தாத அல்லது மிகுதியாக உள்ள நன்றாக உள்ள ஆடைகளையும், ஜோடுகளையும் முஸ்தீப்புகளையும் நமது வசம் ஒப்படைத்துவிடவேண்டும். குண்டு வீச்சினால் பாதிக்கப்படாத ஒவ்வொரு குடும்பத்தாரிடமும் சில உபயோகமுள்ள ஆடைகளும் முஸ்தீப்புகளும் இருக்கத்தான் வேண்டும். அவைகள் படைகளுக்கு உரித்தான ஆடைகளாக இருக்கவேண்டுமென்பதில்லை. எந்தக் கக்ஷியைச் சேர்ந்தவர்களின் ஆடைகளும், சுங்கவரி உத்தியோகஸ்தர்கள், ரெயில்வே கண்டக்டர்கள், ரெயில்வே அதிகாரிகள், தீயணைக்கும் படைகள், போலீஸ், துப்பாக்கியாளர்கள், காட்டிலாக்கா அதிகாரிகள் முதலியவர்களின் ஆடைகளும் உபயோகமுள்ளவைதான். ரிடையரான பொதுஜன சேவகர்களும் அவர்களுடைய உடுப்புப் பெட்டியில் அநேக ஆடைகளை வைத்திருக்கக்கூடும். போரில் உயிர் துறந்தவர்களின் ஆடைகளும் ஜெர்மனியை தற்காப்புச் செய்கிறவர்களுக்கு அனுப்பப்படலாம்."

நேசதேசத்தாரின் தாக்குதலை சமாளிக்க இவ்விதமான தூர்பலமான ஒரு படை ஜெர்மனியில் தயாரிக்கப்பட்டு வருகிறது. அவைகளுக்கு வேண்டிய முஸ்தீப்புகளுக்கும் ஆடைகளுக்கும் ஜெர்மனி பிச்சைக்குப்புறப்பட்டுவிட்டது.

வி வி வி வி வி

ஜெர்மனியின் கிரனேடியர் படைகள். ரக்ஷகப் படையுடன் இவைகளும், கொரில்லாப்படைகளும் மற்றும் சில ஏற்பாடுகள். இந்த மூன்றும் சமீபகாலத்தில் சிருஷ்டனை செய்யப்பட்டவை. கிரனேடியப் படைகள் ஜெர்மன் சேனையின் ஒருபாகம். ஆகிலும் அதில் போர்முனையின் முன்னணியில் உள்ள சிரமங்களை அனுபவிக்க லாயக்கில்லாத யோக்யதையற்ற விருத்தர்களும் வாலிபர்களும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆயுதங்களும் பயிற்சியும் குறைவானவை. இந்தப் படைகள் போர்ப்படைகளுடன் கலந்து போர்முனையில் நிற்கிறார்கள். அவர்களின் அனுபவக் குறவையும் சக்தியின்மையையும் நேசதேசத்தார்கள் கண்டுபிடித்துவிட்டார்கள். போர் கடுமையாக நடைபெறும்பொழுது அவர்களில் அநேகருக்கு உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கும். அவர்கள் தாராளமாகச் சரண்புகுந்து விடுவார்கள். படைகளை அதிகப்படுத்தி எதிர்த்து நின்றுவிடலாமென்று ஜெர்மனி நம்பியிருக்கிறது. பயிற்சிக் குறைவும் அனுபவமுமில்லாத சேனைகள் ஒரு பளுவென்பதுடன் அவைகளின் பலஹீனம் நல்ல பயிற்சிபெற்ற ஸோல்ஜர்களையும் கொடுத்துவிடக்கூடும். ஆகிலும் மூழ்கிக்கொண்டிருக்கும் ஒருவன் சிறு துரும்பையும் பிடித்துக் கரையேற முயல்வானல்லவா?

வி வி வி வி வி

ஆட்டம் கண்டுவிட்டது. ஜெர்மனியில் கதியின்மையும் அலக்ஷிய புத்தியும் அதிகரித்துவிட்டதென்று தகவல் கிடைத்துவருகின்றன. பேஸலிலிருந்து கிடைத்த ரிபோர்ட்டிலிருந்து ஜெர்மனியில் விரிவான சிதைவு ஏற்பட்டுவிட்டதென்று தெரியவருகிறது. ஹிம்லரின் அதிகாரம் க்ஷீணித்துவருகிறது. அவனுடைய அதிகாரிகள் அவனைக் கைவிட்டுவருகிறார்கள். பீத்திக்கொண்ட ஜெர்மன் ரகசியப் போலீஸார்கள் தங்களுடைய உடுப்புகளையும் அடையாளங்களையும் களைந்துவிடத் தயாராக இருக்கிறார்கள். ஸ்டார்லின்கிராட் சம்பவத்தை ஞாபகப்படுத்தக்கூடிய படங்களும் சுவர் படங்களும் தயாரிக்கப்பட்டு சமாதானம் செய்துகொள்ளவேண்டுமென்று வற்புறுத்துகின்றன. "ஹிட்லரை ஒழியுங்கள்" என்ற எழுத்துக்கள் சுவர்களில் எழுதப்பட்டிருக்கின்றன. ஜெர்மன் படையை விட்டு நழுவிவந்தவர்கள் மாக்விப் படைகளுடனும் சேர்ந்து பவேரியா, டைரோலியன் மலைகளில் ஒன்றுகூடுகிறார்கள்.

வி வி வி வி வி

கிழக்குப் போர்முனையில். ருஷ்ய மாரிகாலத் தாக்குதல் ஆரம்பமாகும் சமயம் சமீபித்துவிட்டதென்ற அறிகுறிகள் காணப்படுகின்றன. ஆறு போர்முனைகள் ஏற்படக்கூடுமென்று தோன்றுகிறது. ரூசல் தீவு விடுவிக்கப்பட்டபின் ருஷ்ய விமானப்படை பால்டிக்கடலிலுள்ள ஜெர்மன் கடற்படையைத் தாக்கிவருகிறது. கிழக்குப் பிரஷ்ய எல்லைச்சரகத்தில் டில்ஸிட்டுக்கு எதிர்த்த பக்கத்தில் ருஷ்யப்படைகள் நீமன் நதியின் கிழக்குக்கரை ஓரமாக பலமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ருஷ்யப் படைகள் டோகே, ஒக்ஸாப்பிலிருந்து முன்னேறி ஏற்கனவே ஸெகோஸ்லாவேகியாவுக்குள் புகுந்துவிட்டன. டைசாவிலுள்ள ஜெர்மன் ஸ்தானங்கள் துணிக்கப்பட்டுவிட்டன. ஆகிலும் சகதியும் மழையும் இடையூறாக இருக்கின்றன. கார்பேதியன் மலையிலிருந்து பெருகும் அருவிகள் பெரிய நதிகளாகத் தோன்றிவிட்டன. பூமிமுழுவதும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கிறது.

அமைதிக் குறைவு. ஹங்கேரியின் உள்நாட்டு சம்பவங்கள் ராணுவ எதிர்ப்பை விட அதிக உபயோகமுள்ளதாக இருக்கக்கூடும். ஜெர்மனிக்கும் அதன் பாக்கியுள்ள கூட்டாளியான ஹங்கேரிக்குமுள்ள சம்பந்தங்கள் முறி படும் நிலைமையிலிருக்கின்றனவென்று டெயிலி டெலிகிராப் பத்திரிகையில் சொல்லப் பட்டிருக்கிறது. நாஸிகளுடன் ஒத்துழைப்பவர்களை அகற்றிவிட பொதுஜனங்களின் கலகம் ஏற்படுமென்று தோன்றுகிறது. வெள்ளைக் கொடிகளுடன் தூதர்கள் சரணாகதி நிபந்தனை களைக்கோர ருஷ்யப்படை வரிசைகளுக்குச் சென்றுவிட்டார்களாம். தாக்கப்படும்பொழுது ஹங்கேரிய ஸோல்ஜர்கள் சரணாகதிசெய்வதற்கு அடையாளமாக சைன்யங்களில் கைக்குட் டைகளைக் கட்டிக்காண்பித்துவிடுகிறார்கள். ஒழுங்கு முறையை பலப்படுத்த நாஸிகள் செய்துவரும் முறைகள் பயன்படவில்லை.

வி வி வி வி வி

பால்கன் நாடுகள். இவைகளின் தோற்றம் இன்னும் தெளிவுபடவில்லை. ஆல் பேனியாவும், யூகோஸ்லாவியாவும் அநேகமாக விடு தலைபெற்றுவிட்டன. அவைகளிலிருந்த ஜெர்மானியர்கள் தப்பி ஓடிவருகிறார்கள். இந்த வாரத்தில் டிடோ கோடாரையும் புட்வாவையும் பிடித்துவிட்டு பிராட்டிலிருந்து சாரா ஜேவோவுக்குப் போகும் இருப்புப்பாதையைத் துண்டித்துவிட்டார்.

வி வி வி வி வி

இதாலி. நேசதேசப் படைகள் உறுதியுடன் ரிமினி—போலோனு ரஸ்தா வழியாக முன்னேறுகிறது. அவைகள் பாயென் லாவின் எல்லைப்புரத்தை அடைந்துவிட்டன. மாண்டோன், கோசினோ முதலிய ஸ்தானங் களிலிருந்து ஜெர்மானியர்கள் முற்றிலும் துரத்தியடிக்கப்பட்டுவிட்டார்கள்.

வி வி வி வி வி

ஐரோப்பா. நேசதேசத்தார்கள் எல்லாப்பக்கங்களிலும் முன்னேறி வருவதினால் ஐரோப்பியத் தலைநகரங்களான ரோம், பாரிஸ், பிரஸ்ஸல்ஸ், லக்ஸம்பர்க், புகாரஸ்ட், ஸோபியா, ஆதென்ஸ், டிரானு முதலியவை கள் ஒன்றின்பின் ஒன்ருக விடுவிக்கப்பட்டன. நாஸிகளின் புதிய உலக திட்டம் எடுபட்டுப் போய்விட்டபடியால் ஐரோப்பிய மக்கள் சாதாரணமான வாழ்க்கை முறைக்குத் திரும்புகிறார் கள். எதிர்பார்த்தபடி எங்குபார்த்தாலும் அதிருப்தியுடன் குழப்பமும் காணப்படுகிறது. ஆகிலும் நேசதேசத்தாரின் முன் யோஜனையாலும் அனுதாபத்தினாலும் கக்ஷிப் பிரதிகக்ஷியுள்ள பெல்ஜியமும் இதாலியும் உள்பட எல்லா நாடுகளும் சமாதானத்தை ஏற்படுத்தவும் ஜனநாயக முறையைக் கையாளவும், புதிய வாழ்க்கை முறைகளை அமைத்துக்கொள்ளவும் பிரியப்படுகின் றன. நாஸிகளை ஆதரித்த ராஜீயக் கக்ஷிக்காரர்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஒழிக்கப்படுகி றார்கள். ஜனசமூக, ராஜீய அபிவிருத்தியில் கவனம் செலுத்தப்படுகிறது. பால்கன் நாடு களில் அமைதியான நிலைமை நிலவுமென்று ஒருவரும் எதிர்பார்க்கவில்லை. மாஸ்கோவுக்கு பிரிடிஷ் பிரதம மந்திரி சமீபத்தில் விஜயம்செய்தது மந்திர வித்தைபோல் பயனளித்துவிட் டது. மாஸ்கோ சம்பாஷணைக்குமுன் கிரேக்கர்கள் சண்டையிட்டுக்கொண்டிருந்தார்கள். பல்கேரியர்கள் தங்களுடைய லாபங்களை வைத்துக்கொள்ளவேண்டுமென்று ஆசைப்பட்டார் கள். யூகோஸ்லாவியர்களின் நட்பு சந்தேகமாகயிருந்தது. இப்பொழுது எல்லோரும் ஒன்றுபட்டுவிட்டார்கள்.

வி வி வி வி வி

லெயிடித் தீவு பிலிப்பைன்ஸில் அமெரிக்கர்கள் யமாஷிடாக் கோட்டு க்குப் பின்புறமுள்ள ஆர்மாக் பள்ளத்தாக்கில் ஜப்பானியப் படைகளைத் தாக்கி வருகிறார்கள். விமான் பாதை மூடப்பட்டுவிட்டது. ஜப்பானியத் தரை அமைப்புகள் விமான மூலம் தாக்கப்படுகின்றன. தரை மார்க்கமாக உதவிப் படைகளைக் கொண்டுவரும் ஜப்பானிய கப்பல் கூட்டங்கள் மூழ்கடிக்கப்படுகின்றன.

வி வி வி வி வி

டோக்கியோ. ஜப்பான் பேரில் விமான நடவடிக்கையில் புதிய கட்டம் தோன்றிவிட்டது. ஜப்பான் இப்பொழுது சீன தளங்களிலிருந்தில்லாமல் 1,500 மைல்களுக்கப்பாலிலுள்ள சைபானிலும், குவாமிலுள்ள தளங்களிலிருந்து தாக்கப்படுகிறது. முக்கியமாக ஜப்பானிய தொழிற்சாலைகளும், விமான உற்பத்தி தளங்களும் தாக்கப்படுகின்றன. ஜெர்மனியைப்போல ஜப்பானும் இப்பொழுது சண்டை விமானங்களைக் கட்டுவதில் அதிக கவனம் செலுத்தி வருகிறது. ஜெர்மனியைப் போல நேசதேசத் தாக்குதலுக்கு முற்போக்காக ஜப்பானும் விமான மூலம் தாக்கப்பட்டு

அதன் தொழிற்சாலைகள் நொருக்கப்படுகின்றன. ஜப்பான் பேரில் உண்மையான விமான நடவடிக்கை துவங்கிவிட்டது.

அமெரிக்க விமானப் படையின் தலைவரான ஜெனரல் ஆர்னால்ட் ஜனாதிபதி ரூஸ்வெல்டுக்குப் பின்வருமாறு தகவல் அனுப்பியிருக்கிறார்.

"விமானத் தாக்குதல் எந்த வகையிலும் அடித்துவிட்டுத் திரும்பி வரும் நடவடிக்கை அல்ல. இது ஏற்பாடாக நடைபெறும் விஸ்தாரமான தாக்குதலாகும். ஜப்பானின் எந்த பாகமும் நம்முடைய வெடி விமானங்களின் குண்டு வீசும் வட்டாரத்தைத் தாண்டியிருக்கவில்லை. எந்த தொழிற்சாலையையும் நமது விமானங்கள் தாக்கக்கூடும். ஜப்பானுக்கான போரை நாம் துவக்கி விட்டோம்.

"போர் இப்பொழுதுதான் துவக்கமாகிவிட்டது. இன்று நாங்கள் டோக்கியோவைத் தாக்க ஆரம்பித்துவிட்டோம். தரை மூலமாகவும், கடல் மூலமாகவும் படையெடுப்பு ஏற்படும் வரையில் நாங்கள் இந்தத் தாக்குதலை நடத்துவோம்.

"நாம் ஜப்பானியரின் யுத்த தந்திரத்தை நொறுக்கிவிடுவோம். ஜப்பானியர்கள் தொழிற்சாலைகளை எங்கு மறைத்து வைத்தாலும் அவற்றைக் கண்டுபிடித்து அழித்துவிடுவோம். நாங்கள் இதைச் செய்தே முடிப்போம். ஜப்பான் வினையைப் பயிரிட்டது. அதன் பயனை அது அனுபவிக்கும்."

வி வி வி வி வி

பர்மா. சீனப் படைகள் பாமோ நகருக்குள் சென்றுவிட்டன. வடக்குப் பக்கத்திலுள்ள எல்லாக் கிராமங்களும் பிடிபட்டன. பாமோ பிடிபட்டபின் சுற்றி வளைக்கப்பட்டிருக்கும் சைனாவுடன் உள்ள ரஸ்தாவுடன் தொடர்பு ஏற்படும். இது ஒரு அற்பமான வழியாகவும் ஏராளமான ஸப்ளைகளைக் கொண்டுபோக முடியாத போதிலும், அதனுடைய உத்சாகம் ஊட்டும் சக்திகள் மிகுதியானவை. அது அதைரியப்பட்டுக்கொண்டிருக்கும் சைனாவுக்கு தைரியத்தைப் புகட்டும்.

வி வி வி வி வி

சைனா. சைனாவில் நேசதேசத்தார்கள் நிரந்தரமாகயிருப்பதற்கு திட்டங்கள் பூர்த்தியாகிவிட்டன. ஜெனரல் வெண்டேமேயர் விபரங்களை வரைந்து விட்டார். அவைகளை மார்ஷல் சியாங்கேஷேக்கும் ஒப்புக் கொண்டுவிட்டார்.

சீன நிர்வாகத்தை சமீப காலத்தில் திருத்தியமைத்ததும் ஒரு நல்ல நடவடிக்கையாகும். வாலிபமுள்ளவர்கள் இதில் சேர்ந்திருப்பதினால் தலைமை வகிக்கும் உரிமை அதிகரிக்கப்பட்டிருக்கிறது. புதிய யுத்த மந்திரியான ஜெனரல் சென் செங்க் சைனாவில் திறமை வாய்ந்த தளகர்த்தர். மேலும் அவர் போரில் பிரகியாதி பெற்றவர். அறிக்கை இலாகா மந்திரியான டாக்டர் வாங்க்ஷிசியா சீன நல்லெண்ணக் கோஷ்டியின் தலைவராகயிருந்தவர். புதிய அயல் நாட்டு மந்திரியான டாக்டர் T. V. சூங் அநேக காலமாக நேச தேச ராஜ தந்திரிகளின் நன் மதிப்பைப் பெற்றவர்.

உலக பத்திரத்தை உத்தரவாதம் செய்யக் கூட்டாக உள்ள தளங்கள்.

உலக சமாதானத்திற்குறிய அமைப்பு.

(டைம்ஸ் பத்திரிகை).

டம்பார்டன் ஒக்ஸ் மகாநாட்டில் நிறுவப்பட்ட உலக சமான திட்டத்தைப்பற்றி எழுதும் பொழுது டைம்ஸ் பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது.

பிரிடனுக்கு அவசரமான சில அலுவல்களிருக்கின்றன. ஒருபுரத்தில் அது உலக ஒப்பந்தத்திலுள்ள கூட்டாளிகளான வல்லரசுகளுடனும் பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளிலுள்ள அதன் கூட்டாளிகளுடனும் அது ஒத்துழைக்கவேண்டும். மற்றொருபுரத்தில் பிரான்ஸுடன் ஒத்துழைத்தும், ஹாலந்து, ஸ்காண்டிநேவியன் ராஜ்யங்களுடன் சேர்ந்துகொண்டும் பரஸ்பர ஒத்தாசை உள்ள பொதுவான தற்காப்பு அமைப்பை ஏற்பாடுசெய்யவேண்டும். இந்த ஒற்றுமை இல்லாததினால்தான் 1940-ல் கெடுதல்கள் சம்பவித்தன.

இந்த நாடுகள் ஒன்றுபட்டுவிட்டால் மேற்கு ஐரோப்பாவில் பத்திரத்துக்குப் பலமான உதவு சுவர் ஏற்பட்டுவிடும். இதைப்போல கிழக்கு ஐரோப்பாவில் உலக பத்திரத்துக்கு ருஷ்யா பலமான உதவு சுவராக யிருக்கும். யுத்தம் காரணமாக இவ்விருவர்களுக்குமிடையே கலைக்கமுடியாத பலமான தொடர்பு ஏற்பட்டுவிட்டது. சில கேந்திரமான தளங்களை எல்லோரும் கூட்டுமுறையில் அனுபவிப்பதும், படை பலத்தைக்கொண்டு கூட்டுமுறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒப்பந்தமும் தவிர வேறு எந்த நடவடிக்கையும் அவர்களுக்குள்ளிருக்கும் ஒப்பந்தத்தை பலப்படுத்த முடியாது. இவ்விதமான உடன்படிக்கைகளைச்

செய்துகொள்ள அத்தேசமக்களிடையே இப்பொழுது காணப்படும் ஆர்வம் இதுவரையில் காணப்படவில்லை.

யுத்த காலத்தில் அமைக்கப்பட்டதுபோல் இந்தப் பொதுவான தளங்களில் சில நேச தேசத்தார்களின் பூமியிலே அமைக்கப்படும். மற்றவைகள் தோற்கடிக்கப்பட்ட எதிரியின் பூமியிலேயே அமைக்கப்படும். அவைகள் உலக பத்திரத்திற்கு சாசுவதமாக உத்தரவாதம் செய்யக்கூடியதாக நிலைபெற்றிருக்கும். யுத்தத்துக்குப்பின் ஜெர்மனியை ராணுவமுறையில் ஆக்கிரமணம் செய்வதென்பது கால அளவற்று நிலைத்திருக்கமுடியாது. அது நீடித்திருந் திருந்தாலும் சொல்பகாலம் நிலைபெற்றிருந்தாலும், ராணுவத்தை வாபஸ் பெறும்பொழுது ஜெர்மனி உலக பத்திர திட்டத்திற்குள் சேர்த்துவிடுவது அவசியமாகும். சாசுவதமான ஏற்பாடு யாதெனில், ஜெர்மனியில் துறைமுகங்களில் கூட்டாக உள்ள தளங்களும், சர்வதேச விமானப்படைகளும் இறங்கி வெளியே செல்லக்கூடிய அநேக விமான தளங்களும் அமைக்கப் பட்டு பரிபாலிக்கப்படவேண்டும். ஜெர்மனி சிக்ஷையை அனுபவித்தபின்னும், மறுபடியும் நாகரீகம் படைத்தபின்னும் ஜெர்மனி உலக பத்திர ஏற்பாட்டில் கலந்துகொண்டு மற்ற நபர்களுடனும் ஒத்துழைக்கவேண்டும். இவ்விதமாக கூட்டான தளங்களும் கூட்டுப் படைகளும் ஜெர்மன் பூமியில் நிலைத்திருக்கவேண்டும். ஆகிலும் அவைகள் வெகுகாலம் நிலைத்திருக்கக்கூடாது. காலவரைக்குட்பட்டதும் அதிகச் செலவேற்படக் கூடியதுமான, தோற்கடிக்கப்பட்ட எதிரியின் தேசத்தை வெற்றிபெற்ற வல்லரசுகள் ஆக்கிரமிப்ப தென்பதற்கு பதிலாக இறுதியில் விரிவான, சாசுவதமான, ராணுவ, ராஜீய முறை அமைக்கப் படும். அவ்விதம் செய்தால்தான் ஐரோப்பாவுக்கு நாளடைவில் ஒற்றுமையும் சமாதானமும் ஏற்படும்.

உலக பத்திரத்தை இவ்விதமாக அமைத்து, அது முன் எச்சரிக்கையாகவும் தற்காப்புக் காகவும் தடை முறையொன்றில்லாமல் உலக சமாதானத்துக்காக பொதுவான ஏற்பாடென்று தோன்றிவிட்டால் சாதாரணமான சிரமங்களைச் சுலபமாகத் தீர்த்துவிடலாம். அவைகளில் முக்கியமானது எல்லைச்சரக பிரச்னை. கூட்டு அனுபவமுள்ள தளங்களை ஏற்படுத்தி உலக பத்திரத்தை ஏற்பாடு செய்துவிட்டால் இந்த எல்லைச்சரக பிரச்னை பிரயோஜனமற்றதாகும். கூட்டு தளங்கள் பொதுவாக எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட அதிகாரிகள் மூலம் அந்தந்த தேச விசுவாசத்தை மதிக்காமல் சர்வதேச அவசியத்தைப் பொருட்படுத்தி முக்கியமான இடங்களில் அமைக்கப்படவேண்டும்.

மேலும் ஏற்பாடான ராணுவ பத்திரத்தை பொருளாதார அமைப்பினின்றும் பிரித்துச் சொல்லமுடியாது. பொருளாதாரமும் அதன் முக்கியமான பாகமாகும். யுத்த தளவாடங் களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை ஆரம்பகாலத்தில் வெற்றிபெறும் வல்லரசுகளின் ஒன்றுபட்ட நடவடிக்கையினால் கட்டுப்படுத்திவிடலாம். ஆகிலும் நேர்முகமான ராணுவ ஆக்ஷியைப்போல கட்டுப்பாடு நடவடிக்கை கெடுதலான ஏற்பாடாக முடியும். தேசத்தின் முன்னேற்றத்தை அழிவு மூலமும், தடை மூலமும் தடைசெய்யும் எந்த ஸ்தாபனமும் வெகு காலம் நீடித்திருக்கமுடியாது. கூட்டாக உள்ள ராணுவ தளங்களின் பத்திரத்துக்கு கூட்டாகஉள்ள பொருளாதாரக் கொள்கையும் ஒத்தாசை செய்து பூர்த்தி செய்யவேண்டும். பொருளாதார நிலைமையின் மூலம்தான் ஜெர்மனி விரிவான ஐரோப்பிய அமைப்பில் பிரிக்க முடியாமல் கலந்துகொள்ள முடியும். பிரான்ஸ், ரைன்லாந்தின் பத்திரத்தையும், ரைன்நதி பிரதேசத்திலுள்ள நாடுகளின் பொருளாதார ஒற்றுமையையும், ரூர் பிரதேசத்தை சமாதானத் துக்கு ஆயுதசாலையாகவும் செய்யக்கூடிய ஒரு திட்டத்தில் பிரெஞ்சுக்காரர்கள் அக்கரை கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் வெளியிட்டபொழுது டிகாலியின் மனதில் இந்த அபிப் பிராயம் தான் குடிகொண்டிருந்தது.

பிரிடனின் பத்திரத்துக்கு முக்கியகாரணமான ஐரோப்பிய நாடுகளில் இவ்விதமான நெடும்போக்குள்ள திட்டங்களை நிறுவுவதுதான் பிரிடிஷ் ராஜ தந்திரிகளின் முக்கிய பொறுப்பு.

ஜெர்மனியை இருவகையில் தாக்குவது.

எண்ணெய்ப் பிரதேசங்களின் பேரில் குண்டு வீச்சு.

(விங் கமாண்டர் L. V. பிரேசர்).

சமீப கால நடவடிக்கைகள் பிரிடிஷ் விமானப் படையின் வெகு தூரம் செல்லும் சக்தி, பலவகைப்பட்ட நடவடிக்கை, சலன சக்தி முதலியவற்றை சிறந்த முறையில் பிரகடனம் செய்திருக்கின்றன.

ஒரு பக்கத்தில் பிரிடிஷ் பாம்பர் படையைச் சேர்ந்த லங்காஸ்டர் விமானங்கள் ஜெர் மனியிடம் பாக்கியாக இருந்த டிர்பிட்ஸை மூழ்கடித்தன. டிராம்ஸோ வளைகுடாவுக்குள்

29 லங்காஸ்டர் வெடி விமானங்கள் வந்தன. கப்பலின் பீரங்கிகள் பலமாகச் சுட்டபோதிலும் வெடி விமானங்கள் 12,000 ராத்தலுள்ள "பூகம்ப" வெடிகளைப் போட்டன. கடைசியில் ஒரு வெடி குண்டு மூலம் பீரங்கிகளும் நொறுக்கப்பட்டன. வளைகுடா பூராவிலும் வெடி குண்டுகளின் புகைப்படலம் காணப்பட்டபொழுது அந்த கப்பல் கவிழ்ந்து மூழ்கிற்று. விமானப்படை நடவடிக்கையில் இது ஒரு முக்கிய நடவடிக்கை. ஒரு லங்காஸ்டர் விமானத்தில் ஒளிப்படம் பிடிக்கிறவர்களிருந்தார்கள். அவர்கள் ஒளிப்படம் பிடித்து கனமான வெடி குண்டுகள் யுத்தக் கப்பலை எவ்விதம் நாசமாக்கக்கூடுமென்பதை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

டிர்பிட்ஸை மூழ்கடித்த நடவடிக்கையும் விசேஷம் பொருந்தியது. இரவு வெடி குண்டு வீச்சுக்காக உத்தேசித்து அனுப்பப்பட்ட விமானப்படைகள் பட்டப் பகலில் குறி தவறாமல் அடித்துத் தாக்கியதிலிருந்து பிரிடிஷ் விமானப்படையின் அபாரமான சலன சக்திக்கு ருஜுக் கிடைத்துவிட்டது. இந்தத் தாக்குதல் மூலம் ஜெர்மன் மன உறுதிக்குப் பலமான அடி விழுந்தது. யுத்தத்தில் நடவடிக்கையை நடத்தக்கூடிய ஒரு சக்தி வாய்ந்த யுத்தக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. ருஷ்யாவுக்கு நேசதேசத்தார்கள் அனுப்பும் சப்ளை மார்க்கத்துக்கு ஏற்பட்டிருந்த அபாயம் நீங்கிவிட்டது. டிர்பிட்ஸிடம் இது வரையில் பயந்து பதுங்கி நின்ற பிரிடிஷ் கப்பற் படையைச் சேர்ந்த கப்பல்கள் இனிமேல் சுறுசுறுப்பான நடவடிக்கைகளுக்கு அனுப்பப்படலாம்,

ஆகிலும் டிர்பிட்ஸை மூழ்கடித்தது சிறந்த நடவடிக்கையென்றாலும் வெடிகுண்டு வீச்சின் புகழ் இத்துடன் நின்றுவிடவில்லை. நேசதேச கனமான வெடிவிமானங்கள்ள் எதிரியின் எண்ணெய்ப் பிரதேசங்களை இடைவிடாது தாக்குவதிலும் முகான்மையாக கவனம் செலுத்தி வருகின்றன.

இதற்குக்காரணம் பழுதுபட்ட எண்ணெய் தொழிற்சாலைகளை துரிதமாகப் பழுது பார்ப்பதில் ஜெர்மானியர் கையாண்டுவரும் உயர்தரமான சக்திவாய்ந்த தந்திரம்தான். அந்த யந்திர சாதனங்களை அழிக்க ஒரு தடவை தாக்கினால் மட்டும் போதாது. ஜெர்மனி யுத்தத்திற்காக நம்பியிருக்கும் எண்ணெய் உற்பத்தியை அதமபக்ஷமான அளவிற்குக் குறைத்துவிட வேண்டுமாகில், நேசதேச கனமான வெடி விமானங்கள் அடிக்கடி நிருதியான காலங்களில் எண்ணெய் லக்ஷியங்களைத் தாக்கிவரவேண்டும். அது உபயோகமுள்ள நடவடிக்கையிலிருந்தே வெளியாகும். எண்ணெய்க் குறைவு மிகுதியாகஏற்பட்டிருப்பதால் ஜெர்மன் விமானப் படை தரையிலேயே நிலைபெற்றிருக்கவேண்டியதாகிவிட்டது. ஜெர்மன் படைகளின் சலனத்துக்கும் தொழிலாளர்களின் வேலைக்கும் குந்தகம்ஏற்பட்டிருக்கிறது.

அக்டோபர் மாதத்தில் மட்டும் பிரிடிஷ் பாம்பர் கமாண்டைச் சேர்ந்த வெடிவிமானங்கள் 1943-ம் வருஷம் அக்டோபர் மாதத்தைவிட $16\frac{1}{2}$ மடங்கு அதிகமாகவும் வெடிகுண்டுகளைப் போட்டிருக்கின்றன. சென்ற மாதத்தில் ஏற்பட்ட விமான நஷ்டம் 1943-ம் வருஷத்தில் ஏற்பட்ட விமான நஷ்டத்துக்கும் ஐந்தில் ஒன்று மடங்காகவும், 1942-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் ஏற்பட்டதைப்போல் ஆறில் ஒரு மடங்கும்தான் என்று சொல்லப்படுகிறது.

இந்த திருப்திகரமான அபிவிருத்திக்கு இரவில் வெடி விமானங்களுக்கு ரக்ஷணைக்காக மஸ்கிடோ விமானங்கள் சென்று அவைகளுக்கு ரக்ஷணையும் அளித்து எதிரியின் இரவு சண்டை விமானங்களுடன் போரிட்டும் வழியிலுள்ள எதிரியின் விமானதளங்களைத் தாக்கியும் வந்தன.

எதிரியின் எண்ணெய் நிலையங்களைத் தாக்கிய கனமான வெடிவிமானங்களின் நடவடிக்கையின் விளைவுகளைக் குறிப்பாகச் சொல்லமுடியாது. அவைகள் அநேக மாதங்களில்தானே வெளிவரும். டிர்பிட்ஸை மூழ்கடிப்பது போன்ற ஒரு நடவடிக்கையின் விளைவுகளை உடன்காலத்திலேயே மதித்துவிடலாம். அந்தக் கப்பல் இப்பொழுது தலைகீழாக தண்ணீரில் மூழ்கிக்கிடக்கிறது. ஆனால் எண்ணெய் பிரதேசங்களைத் தாக்கும் மகத்தான வெடிவிமான நடவடிக்கைகள் அநேக மறைமுகப்படுத்தும் உபாயங்களால் மூடப்பட்டிருக்கின்றன. தரைப்போரைப் போல் இந்த நடவடிக்கைகளும் சிலாக்கியமானவைதான்.

ஆகிலும் சில உருவான உண்மைகள் புலப்படுகின்றன. தாக்குதல் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. முக்கியமாக சேர்க்கை எண்ணெய் நிலயங்கள் தாக்கப்படுகின்றன. ருமேனிய எண்ணெய் பிரதேசங்களை ஜெர்மனி இழந்தபின் சேர்க்கை எண்ணெய்தான் ஜெர்மனியில் உபயோகிக்கப்படுகிறது. சென்ற மே மாதத்தில் முதன்முதலில் தாக்கப்பட்டபின் சுடேடன்லாந்திலுள்ள சேர்க்கை எண்ணெய் தொழிற்சாலை அதன் வேலையை இதுவரையில் துவக்கம் செய்யக்கூடவில்லை. ஜெர்மனிக்குக் கிடைக்கக்கூடிய இயற்கை எண்ணெயை சுத்திசெய்யும் சாதனங்களின் உற்பத்தியும் சாதாரண அளவிற்கு நான்கில் ஒரு பங்குக்குக் குறைவாகக் குறைந்துவிட்டது. ஜெர்மனிக்கு ஏற்பட்ட இவ்வித கஷ்டங்கள் ஜெர்மனியில் ஊறி அதன்

விளைவுகள் போர்முனையில் பிரதிபலிக்குமுன் அநேக மாதங்கள் செல்லக்கூடுமென்றாலும் நிச்சயமான உண்மைகள் தோன்றிவிட்டன.

ஒன்று படுத்திப்பார்க்குமளவில் எண்ணெய்ப் பிரதேசங்களைத் தாக்கும் நடவடிக்கை மகத்தான நடவடிக்கைக்கு முற்போக்காகத்தானிருக்கும். ஏனெனில் உற்பத்திசெய்யப் படும் எண்ணெயைப் போர்முனைகளுக்குக்கொண்டுபோகவேண்டும். அங்கும் நேசதேச விமானங்கள் குறுக்கிட்டு இருப்புப்பாதை வழிகளைத் துணித்துவிடுகின்றன. போக்குவரத்து ரஸ்தாக்கள்மூலம் நடைபெறவேண்டியிருக்கிறது. அதற்கு அதிக எண்ணெய் செலவாகிறது. உற்பத்தி தளத்தில் அழிக்கப்படாத எண்ணெய் வழியிலோ அல்லது போர்முனையிலுள்ள எண்ணெய்க் கிடங்கிகளிலோ அழிக்கப்பட்டுவிடுகிறது.

ஆகிலும் இன்னும் நமக்குச் சரியான அறுவடை கிடைக்கவில்லை. நேசதேசப் படைகள் ஜெர்மனிக்குள் புகுந்துவிடும் வரையில் இவைகள் வெளிப்படாது. ஆகிலும் ஜெர்மனியில் எண்ணெய்க்குறைவு நிச்சயமாய் ஏற்படும். இந்த அறுவடை யுத்தத்திலேயே மிகவும் சிறந்ததாக இருக்கும்.

துருக்கியின் பொருளாதார பிரச்னைகள்.

ஏற்றுமதிக் குறைவு.

லியோனர்ட் கிர்ஷென்.

ஜெர்மனியுடன் துருக்கிக்குள்ள ராஜதந்திர உறவு ரத்தாகிவிட்டதால் துருக்கிக்கு ஒன்று அல்லது இரண்டு பொருளாதார பிரச்னைகள் உண்டாகியிருக்கின்றன இந்தப் பிரச்னைகள் யுத்த முடிவு நெருங்க நெருங்க மிகவும் அத்தியாவசியமாக கவனிக்கப்பட வேண்டியதாக இருக்கின்றன.

துருக்கியின் பொருளாதார அமைப்பு நாள்பட்டதால், ஆட்டோமன் வம்சத்தார்கள் ஆக்ஷிபுரிந்த நாளில் துருக்கியில் அயல் நாட்டார்கள் வியாபாரம் செய்து வந்தார்கள். வியாபாரமென்பது இழிவானதென்று துருக்கியிலுள்ள நடுநிலைமையுள்ள வகுப்புகள் கருதி வந்தன. துருக்கியில் ஏற்பட்ட புரக்ஷியின் காரணமாக இந்த மனோபாவம் மாறியிருக்கிறது. 1930-ம் வருஷம் வாக்கில் பொருளாதாரத் தாழ்வும், யுத்தத்துக்குமுன் ஆயுதங்களைக் குவிக்கவேண்டுமென்ற நெருக்கடியும், அதன்பின் ஏற்பட்ட யுத்தமும், எல்லாம் சேர்ந்து துருக்கியின் முற்போக்கைத் தடைசெய்து விட்டன. அவ்விதம் தடை செய்யப்படாமலிருந் திருந்தால் துருக்கியின் பொருளாதார நிலைமை படிப்படியாகவும் அழகாகவும் வளர்வடைந் திருக்கும்.

யுத்தம் சிறந்த யுகம் என்று துருக்கி நினைத்தது. அநேக நூற்றாண்டுகளாக ஆட்டோமான்கள் வரிவசூல் செய்ததை சரிப்படுத்த துருக்கியிலுள்ள குடியானவர்களுக்கு வசதியே கிடைக்கவில்லை என்று சொல்லப்பட்டது. இதை விண, கண்டிப்பான நடுநிலைமை வகிக்கிறோ மென்று சொல்லி துருக்கி அதையும் பூராவாகப் பயன்படுத்திக்கொண்டது.

துருக்கியர்களுக்கு நடுநிலைமை என்பது போர்புரியும் இரண்டு தேசத்தார்களின் மத்தியில் இருந்துகொண்டு இருவர்களிடமிருந்து பணத்தை சம்பாதிப்பது என்று பொருள்படும்.

இந்த மனப்பான்மைக்கு பூராவாக நிர்வாகம் ஜவாப்தாரியல்ல. ஆனால் அந்தப் பொறுப்பில் அதற்கும் ஒரு பாகம் உண்டு. யுத்த வெறி நிர்வாகத்தையும் வியாபாரிகளையும் கைவசப்படுத்திவிட்டது. துருக்கிக்கும் பிரிடனுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் பொருளாதார ஒத்தாசை பெறுவதற்கும், குத்தகைக் கடன் திட்டப்படி சாமான்களைப் பெறுவதற்கும் நல்ல சந்தர்ப்பத்தை அளித்தது.

பிரிடனும் அமெரிக்காவும் துருக்கிக்கு குத்தகைக் கடன் மசோதாவின்படி யுத்த தளவாடங்களை கொடுத்துவந்தன. கனமான யுத்த தளவாடங்கள் துருக்கிக்கு அனுப்பப் படுவதற்குமுன் அநேக நாட்கள்வரையில் துருக்கிக்கு வியாபாரச் சாமான்கள் வியாபார முறையில் அனுப்பப்பட்டன. இதுவரையில் துருக்கி அமெரிக்காவுடன் குத்தகைக் கடன் திட்டத்தில் நேர்முகமாகக் கையெழுத்திட மறுத்துவிட்டது. குறிப்பிட்ட காலவரையில் அதனால் கடனைத்திருப்பிக் கொடுக்கும் பொறுப்பை அது ஏற்றுக்கொள்ள முடியாதென்று அது சொல்லிவிட்டது.

கொள்ளையடித்த பொருளுடனும், கொள்ளையடித்த தொழிற்சாலைகளுடனும் ஜெர்மனி அநேக காலம் வரையில் துருக்கியின் நிர்வாகத்திற்கு அத்தியாவசியமான பொருள்களை ஸப்ளை செய்துவந்தது. உள்நாட்டு வியாபார ஸ்தலங்களில் கிருஸ்துமஸ் விளையாட்டு பொம்மைகளும், சாதல்வார் சாமான்களும் ஏராளமாகக் குவிக்கப்பட்டிருந்தன.

போர்புரியும் இருதேசத்தார்களும் துருக்கியிடமிருந்து சாமான்களை வாங்கவேண்டியிருந்தது. போட்டி ஏற்பட்டதினால் துருக்கிசாமான்களின் விலை பன்மடங்கு அதிகரித்தது. நமக்கு பொருளாதார முறையில் அபரிமிதமான முன்னேற்ற மேற்படப்போகிறது என்று துருக்கி கொண்டிருந்த எண்ணத்திற்கு இது தூபம் போட்டதுபோலாகி விட்டது.

வீட்டிலுள்ள சாமான்களெல்லாம் நிர்வாக அதிகாரிகள் மூலம் வியாபாரஸ்தலங்களுக்கு கொண்டுபோகப்பட்டன. தொழில் நடத்தும் சங்கங்கள் கைக்குட்டைகள் முதல் நெசவு துணி உள்பட எல்லா சாமான்களையும் சில்லரை வியாபாரிகளுக்கு திட்டமான விலைக்கு அனுப்பிவந்தார்கள். யுத்தத்தைத் துவக்காமலேயே துருக்கியின் பொருளாதாரத்தை அமுல் நடத்திவரும் நிர்வாகம் அவசரத்துக்குரிய திட்டப்படி வேலை செய்து வந்தது. இப்பொழுது நிலைமை மாறிவிட்டது. துருக்கி யுத்தத்தில் ஈடுபடவில்லை. ஆகையால் இதுவரையில் துருக்கிக்குக் கிடைத்துவந்த சௌகரியங்கள் இப்பொழுது குறைந்துவிடும். சில காலத்துக்குமுன் அயல் நாடுகளுடன் யுத்தத்துக்கு முன்னிருந்த முறைப்படி வியாபாரத்தை திரும்பி அமைக்கவேண்டுமென்று பிரியப்படுவதாக பிரிடிஷ் நிர்வாகம் சொல்லிற்று. அதாவது வியாபாரம் சாதாரணமான நிலைமைக்கு வரவேண்டும். இறக்குமதி செய்கிறவரும், ஏற்றுமதி செய்கிறவரும் சமமான அந்தஸ்திலிருக்கவேண்டும்.

இந்த உணர்ச்சி துருக்கியில் பரவ ஆரம்பித்தபொழுது துருக்கிக்கும் ஜெர்மனிக்குமுள்ள பொருளாதார உறவு ரத்து முடிபட்டது. அதிகாரிகளின் அறுகுறையான அமுலுக்குட்பட்ட ஊலுஸ் என்னும் பத்திரிகையில் எலெட் டெகலி பின்வருமாறு எழுதுகிறார்:— ஜெர்மனிக்கும் நமக்கும் உள்ள வியாபாரம் யுத்தத்துக்கு முன்னிருந்ததைப்போல யுத்தம் துவக்கிய பின் அவ்வளவு மிருதியாக இல்லாவிட்டாலும், அது 1943-ம் வருஷத்தில் பெருந்தொகையாகவே இருந்தது. துருக்கி ஜெர்மனிக்கு ஏற்றுமதி சாமான்களில் 23.80 சத விகிதம் அனுப்பிவந்தது. இறக்குமதிப் பொருள்களில் ஜெர்மனியிலிருந்து வந்த சாமான்கள் 37.70 சதவிகிதமாக இருந்தது.

துருக்கியின் வியாபாரத்தில் ஏற்பட்ட இந்த இடைவெளியைச் சரிப்படுத்த வேண்டும். இதற்கு என்ன சௌகரியங்களிருக்கின்றன. துருக்கிய நிர்வாகம் வியாபாரத்துக்குத் தாதி போல் நடந்துகொண்டிருக்கிறது. ஆனால் நிர்வாகம் இத்துறையில் சுலபமாக இறங்கிவிட முடியாது. ஏனெனில் கவர்ன்மெண்டின் ஜவாப்தாரித்வத்தின் பேரில் வியாபாரம் செய்வது ஒரு விஷயம். உலக வியாபாரஸ்தலங்களில் பொருள் வாங்குவது மற்றொரு விஷயம்.

ஆனால் இப்பொழுது ஒரு சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. துருக்கியின் ஏற்றுமதிப் பொருள்களை ஒருவரும் வாங்க பிரியப்படுகிறார்களில்லை. ஏனென்றால் எல்லோரும் துருக்கியில் நிரந்தரமான ஏற்றுமதிப்பொருள்களை உபயோகிக்க முடியாது. அவைதான் புகையிலையும் உயர்ந்த பழங்களும், பால்கன் நாடுகளிலுள்ள வியாபாரஸ்தலங்கள் மூடப்பட்டுவிட்டன. அவைகள்தான் துருக்கியின் தாவர எண்ணெயையும் உலோகங்களையும் விலைக்கு வாங்கின.

கடற்தளபதி லூயி மௌண்ட் பேடன் பிரபு.

தெற்கு ஆசியாக் கமாண்டின் உயர்தர தலைவரான லூயி மௌண்ட் பேடன் பிரபு இருபதாவது நூற்றுண்டின் நாகரீகத்தைச் சேர்ந்தவர். இங்கிலாந்தில் சென்ற 40 வருடங்களாக இருந்த பழக்கவழக்கங்களும் மாறுதல்களும், 1,900 வருஷம் ஜூன் மாதம் 25-ம் தேதி ஆரம்பமான அவருடைய வாழ்க்கையில் காணப்படுகின்றன. அவருடைய தகப்பனரான பாட்டன்பெர்க் லூயி இளவரசர் கடற்படையின் கடற்தளபதியாக இருந்தார். அவருடைய தாயார் விக்டோரியாவின் பேத்தியான விக்டோரியா இளவரசி, அந்தக் குடும்பத்தின் முன்னோர்களின் ஐதீகப்படிக்கும், தகப்பனரைப் பின்பற்றியும் அவர் பிரிடிஷ் கடற்படையில் வேலைக்கு அமர்ந்தார். அவர் முதலில் ஆஸ்போர்ன் கடற்படைப் பயிற்சிக் கல்லூரிக்கும், பிறகு டார்ட்மௌத்துக்கும் சென்று பயிற்சி பெற்றார்.

1914-ல் அவர் டார்ட் மௌத்தில் காடட்டாக இருந்தார். 1916-ல் லையன் என்னும் கடற்தளபதி பியாட்டியின் தலைவர் கப்பலில் வேலைசெய்து வந்தார். 18 வயது ஆகும் பொழுது அவர் வடக்குக் கடலில் துணைக்காவல் கப்பலில் இரண்டாவது தலைவராக இருந்தார். 1918-ம் வருஷத்தில் P. 31 என்ற நீர்மூழ்கியில் அவர் ஸப் லெப்டினண்டாக இருந்தார். சென்ற யுத்தத்தில் கடைசி வருஷங்களில் வெயர்லஸ்ஸிலும் தந்தி அமைப்பிலும் விசேஷ முன்னேற்றம் ஏற்பட்டுவந்தது. மௌண்ட் பேடனுடைய தகப்பனர் பாட்டன்பெர்க் வழிகாட்டும் கருவியைக் கண்டுபிடித்தார். மௌண்ட் பேடனும் அநேக வருஷங்களுக்குப் பின் அநேக கருவிகளைக் கண்டுபிடித்தபோதிலும், வெயர்லஸ்ஸிலும் அடையாள அறிவிப்பிலும்தான் அவர் விசேஷ அனுபவம் பெற்று புதிய முறைகளைக் கண்டுபிடித்தார்.

1919-ல் லூயி மௌண்ட் பேடன் நூற்றுக் கணக்கான வாலிபமுள்ள கவலையற்ற ஆபீஸர்களுடன் கேம்பிரிட்ஜுக்குச் சென்றார். ஒரு வருஷத்திற்குப்பின் வேல்ஸ் இளவரசருடன் ஆஸ்திரேலியாவிலும், நியூஸிலாந்திலும் சுற்றுப்பிரயாணம் செய்ய ரினோன் என்ற பிரிடிஷ் கப்பலில் சென்றார். ரிபல்ஸ் கப்பலில் சிறிதுகாலம் வேலைசெய்தபின் மறுபடியும் ரினோன் கப்பலில் பிளாக்-லெப்டினண்டாகவும், வேல்ஸ் இளவரசர் 1922-ம் வருஷத்தில் இந்தியாவுக்கும், ஜப்பானுக்கும், தூரக்கிழக்கு நாடுகளுக்கும் சுற்றுப்பிரயாணம் செய்தபோது மெய்க்காப்பாளராகவும் சென்றார்.

தூரக்கிழக்கிலிருந்து திரும்பிவந்தபின் கடற்கரையில் அநேக உத்தியோகங்களை அவர் வகித்தார். 1927-ம் வருஷத்தில் அவர் ஸர் எர்னஸ்ட் காஸலின் பேத்தியான எட்வினு ஆஷ்லியை மணந்தார். 1928-ம் வருஷத்தில் அவர் இரண்டாவது நாசகாரிப் படையில் சமிக்ஞை, வெயர்லஸ் ஆபீஸராக அமர்ந்தார். இந்த வருடங்களுக்கிடையே அவர் லண்டனில் ஜன சமூக வாழ்க்கையிலீடுபட்டு கடற்படை போலோ கோஷ்டியைத் தயாரித்தார். அடுத்தபடியாக 1931-ல் வெயர்லஸ் ஆபீஸர் வேலையில் அமர்ந்தார். 1931 முதல் 1933 வரையில் மத்தியதரைக் கடலிலுள்ள கடற்படையின் வெயர்லஸ் ஆபீஸராக இருந்தார். 1934-ம் வருஷத்தில் டேரிங் என்ற நாசகாரியின் தலைவராக நியமிக்கப்பட்டு இரண்டு வருஷம் வேலைபார்த்தார். அடுத்த வருஷம் விஷர்ட் என்னும் கப்பலின் தலைவராக இருந்துவிட்டு அதன்பின் கடல் விமான இலாகாவில் ஒரு ஸ்தானத்தை வகித்தார்.

அவருடைய அனுபவமும், அநேக சர்ச்சைகளும், பொழுது போக்கிலும், யந்திர வேலையிலும் அல்லது கப்பலோட்டுவதிலும் அவர் செலுத்திவரும் ஆழ்ந்த கவனமும் சேர்ந்து மௌண்ட் பேடன் மூடி என்ற சமிக்ஞை உபாயத்தையும், மற்ற அநேக கருவிகளையும் உற்பத்தி செய்துவிட்டன. அந்த நூதனமான சாதனங்கள் மூலம்தான் பிரிடிஷ் கடற்படையின் வெயர்லஸ் திட்டம் தற்போதிய நிலைமைக்கு அபிவிருத்திசெய்யப்பட்டது. யுத்தத்துக்கு இரண்டு வருடங்களுக்குமுன்தான் மௌண்ட்பேடன் ஸ்டேஷன்கீபர் என்ற கருவி கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக்கருவி இப்பொழுது நாசகாரிகளில் அமைக்கப்பட்டிருக்கிறது.

கடற்படை இலாகாவைவிட்டுச் சென்றபின் அவர் நாசகாரிகளின் வேலைக்குச் சென்றார். 1939-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் 5-வது நாசகாரிப்படையின் தலைவராக நியமிக்கப்பட்டார். அவருடைய கப்பலுக்குக் கெல்லி என்று புதிதாகப் பெயர் வழங்கப்பட்டது.

கெல்லியின் கதை வெகு சீக்கிரத்தில் முடிவடைந்தது. 1939-ம் வருஷ முடிவில் நார்வேக் கடற்கரைக் கருகில் அது சுரங்க வெடியின் மேல் மோதிவிட்டது. 9-மணிகள் அதை நடத்திக்கொண்டுவந்து அதைக் கரைசேர்த்ததற்காக அவருக்கு D. S. O. பட்டம் வழங்கப்பட்டது. மறுபடியும் வடக்குக் கடலில் 1940-ம் வருஷம் மே மாதத்தில் அது மீன் வெடியால் தாக்குண்டது. அதைக் கைவிட்டுவிடுவதாக மௌண்ட் பேடனுக்கு பிரியமில்லை. அதன் ஆட்களை வேறு கப்பலுக்கு மாற்றியபின் கமாண்டர் கப்பலை மூன்று நாட்கள் நடத்தி மறுபடியும் பழுதுபார்க்கக் கரைசேர்ந்தார். பழுதுபார்க்கப்பட்டு அது மத்தியதரைக் கடலுக்குச் சென்றது.

கிரீட்டுக்கு சமீபத்தில் நடைபெற்ற கடும்போரில் 1941-ம் வருஷம் மே மாதம் 23-ம் தேதியன்று அது அடிபட்டு மூழ்கிவிட்டது. மௌண்ட் பேடனும் அவருடைய ஆட்களும் அநேக மணிகள் சிரமித்து காப்பாற்றப்பட்டார்கள்.

கெல்லி மூழ்கியபின் மௌண்ட் பேடன் 5-வது நாசகாரிப்படையிலிருந்து இல்லஸ்ட்ரியஸ் என்னும் கப்பலில் வேலையை ஒப்புக்கொண்டார். 5-வது நாசகாரிப்படையில் 5 வருஷங்கள் அவர் வேலைபார்த்திருக்கிறார். கெல்லி பழுதுபார்க்கப்பட்டபொழுது அவர் வேறு கப்பல்களில் பிரயாணம் செய்துவந்தார். 1940-ல் 5-வது நாசகாரிபடை இங்கிலீஷ் கால்வாயில் ஒரு இரவில் ஜெர்மன் நாசகாரிகளைத் தாக்கியபொழுது மௌண்ட் பேடன் ஜாவெலின் என்ற கப்பலில் சென்றார். உத்தியோக அறிக்கைப் பிரகாரம் ஜாவலின் மீன்வெடியால் தாக்குண்டது. ஆகிலும் அது துறைமுகத்துக்கு வந்துசேர்ந்தது.

அவர் இல்லஸ்ட்ரியஸ் கப்பலில் வெகுகாலம் வேலைபார்க்கவில்லை. 1942-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில்தான் அவர் ஒன்றுபட்ட நடவடிக்கைகளின் தலைவராக நியமிக்கப்பட்டபோதிலும், 1941-ம் வருஷம் அக்டோபர் மாதம் 19-ம் தேதியன்றே அவர் ஒன்றுபட்ட நடவடிக்கைகளில் ஆலோசகர் என்ற பதவியில் முதல்தரமான கமோடாராக நியமிக்கப்பட்டார். இல்லஸ்ட்ரியஸ் அமெரிக்க கப்பற்தளத்தில் பழுபார்க்கப்பட்டு வந்தபொழுது அவர் பெர்ல் துறைமுகத்தில் அமெரிக்கக் கடற்படையை பார்வையிட்டு வந்தார். அங்குள்ள ஹான லூலுவிலிருந்து விமானமூலம் லண்டனுக்கு வந்து 1941-ம் வருஷம் அக்டோபர் மாதம் 27-ம் தேதியன்று புதிய வேலையை ஒப்புக்கொண்டார்.

அவருடைய புதிய உத்தியோக காலத்தில் வாக்ஸி, ப்ருனிவல், ஸெயிண்ட் நாஸரே, டிப்பி முதலிய சம்பவங்கள் நடைபெற்றன. டெல்லியில் அவரிருந்தபொழுது அநேக சம்பவங்கள் நேரிட்டதுபோல் இப்பொழுதும் அநேக விமானத் தாக்குதல்கள் நடைபெற்றன. மௌண்ட்பேடனுடைய நாசகாரிக் கப்பல்கள் எதிரியின் மிகுதியான கப்பல்களுடன் போர் புரிந்து அவருக்கு D. S. O. பட்டம் மற்ற இரண்டு பாராட்டுகளை சம்பாதித்துக் கொடுத்ததுபோல, அவருடைய சிறிய விமானப்படையும், வேகத்துடனும், இருட்டிலும், எதிரியை ஸ்தம்பிக்கும்படி தாக்கியதால் அவருக்கும் புகழை சம்பாதித்துவிட்டது.

அவர் முன்னொரு தடவை சொன்னார் "ஸோல்ஜர்களை கப்பல்களில் கொண்டுபோகாவிட்டால் நாம் யுத்தத்தில் வெற்றிபெற முடியாது. சப்பல்களுக்கு விமானப்படை உதவி வேண்டும். அதாவது மூன்று படைகளின் ஒன்றுபட்ட தாக்குதல் ஏற்படவேண்டும்.

கடற்படைப் போரைப் போலில்லாமல் கமாண்டோபடைத் தாக்குதல் ஏற்படவேண்டுமானால் முன்னேற்பாட்டின்படி படைகள் குறிப்பான இடத்தில் குறிப்பான நேரத்தில் இறங்கவேண்டும். அதன்பின் தாக்குதல் முடிந்தபின் படைகள் திரும்பிவரவேண்டும். எவ்வளவு சிறந்த முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்பதை வாக்ஸோவைப்பற்றி மௌண்ட் பேடன் சொல்லியிருக்கும் வியாக்கியானத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். "கால அட்டவணை சிறிது தவறிவிட்டது. நாங்கள் 8.30 மணிக்கு இறங்கவேண்டியது. முதலில் இறங்கியவர் 8.31-க்கு இறங்கினார். பின்வாங்குவதற்கு 3 a. m. குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும் அவைகள் 2.45. a. m-க்கே புறப்பட்டுவிட்டன.

நிர்வாக வேலையிலும் மௌண்ட் பேடன் தீரர். அவர் எவ்வளவு தாக்குதலில் ஈடுபட்டார் என்று சொல்லுவதற்கில்லை. ஆனால் அவர் கமாண்டோ சேவையில் பயிற்சிபெற்றார். அவருக்கு ஒரு மேற்கோள் உண்டு. "உன்னால் செய்யமுடியாத காரியத்தை பிறருக்கு உபதேசம் செய்யாதே."

மூவகைப்படைகளை ஒன்றுபடுத்தும் அவருடைய சாமர்த்தியமும் சாம்ராஜ்ய, நேசதேச ஐரோப்பிய, அமெரிக்கப் படைகளுடன் ஒத்துழைக்கும் அனுபவமும் பயன்படுத்தக்கூடிய வகையில் கடற்தளபதி லூயி மௌண்ட்பேடன் பிரபு 1943-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 25-ம் தேதியன்று தென்கிழக்கு ஆசியாவின் உயர்தர கமாண்டராக நியமிக்கப்பட்டார்.

1943-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் பாத் ஆர்டரின் கமாண்டராக அவர் நியமிக்கப்பட்டார்.

விமானப்படை கமாண்டர் J. B. டெயிட்.

டிர்பிட்ஸைத் தாக்கிய நடவடிக்கையில் தலைவர் "பீடர்பரோ".

(டெயிலி டெலிகிராப்.)

டிர்பிட்ஸ் கப்பலை மூழ்கடித்த லங்காஸ்டர் விமானங்களின் தலைவரான விமானப்படைத் தலைவர் J. B. டெயிட், D. S. O. D. F. C. பாம்பர் கமாண்டுப் படைத்தலைவர்களின் சரியான வார்சுதான்.

அவர் தலைமை வகிக்கும் விமானப்படையின் தலைவர்களாக இருந்தவர்களைவிட அவர் அதிகமான அனுபவம் வாய்ந்தவர். ஏனெனில் விமானப்படைத் தலைவர்களான கில்ஸனும், செஷயரும் டெயிட்டுக்குப்பின் அநேக வருஷங்கள் கழித்து வேலையில் அமர்ந்தார்கள். அவ்விருவர்களும் டெயிட்டைப்போல அவ்வளவு மணி நேரங்கள் விமானங்களில் பறந்து செல்லவில்லை. டெயிட்டுடன் தேர்ந்தெடுக்கப்பட்டு கமிஷன் பெற்றவர்களுக்குள் அநேகர் குறைந்துவிட்டபோதிலும், அவர்களுக்குள் டெயிட்டுக்குத்தான் மிகவும் அதிகமான கௌரவ அடையாளங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

1936-ம் வருஷம் கிரான்வெல் பள்ளிக்கூடத்திலிருந்து வெளியேறியபின் டெயிட் கனமான வெடிவிமானப் படைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். அதிலிருந்து அவர் அந்த வேலையிலேயே இருந்துவருகிறார்.

டெயிட் துணிவுகரமான வாலிபமுள்ள மாலுமிகள் தவறான அபிப்பிராயம் கொள்ளுவதுபோல் ஜனரஞ்சகமானவரல்ல. அவருடைய அறையில் ஜீவிய சரித்திரமடங்கிய அநேக புத்தகங்களிருக்கும். அவருடைய புத்தகசாலையில் புராணக்கதைகளடங்கிய அநேக புத்தகங்களும் இருக்கின்றன. அவருடைய சம்பாஷணைகளில் அந்த அறிவின் சின்னங்கள் காணப்படும்.

ஒரே ஒரு அம்சத்தில்தான் அவர் விமானிகளைப்போல நடித்துக்கொள்ளுவார். அவர் ரஸ்தாக்களில் அதிகமாகச் செல்லுவார். சமாதான காலத்தில் அவரிடம் நீளமான குட்டை

யான ஒரு கார் இருந்தது. அதை அதிவேகமாக அவர் ஓட்டிச் செல்லுவார். அவ்விதம் அது போகாவிடில் சுக்குச்சுக்காகப் பிரித்து ரிப்பேர் செய்வார்.

யுத்த சேவையை விஷயமாகக்கொண்ட ஒரு சிறந்த புராணத்தை எழுதும்பொழுது அவர்கள் டெயிட்டைப்பற்றி மிகவும் நல்ல முறையில் எழுதவேண்டுமென்று தான் நினைக்கிறேன்.

அரிசிக்குமுன் பாக்ஸைட்.

(V. S. சுவாமிநாதன்.)

பெர்ல் துறைமுக நடவடிக்கையின்பொழுது அநேக சௌகரியங்களுடன் போரைத் துவக்கிய ஜப்பான் இப்பொழுது ஏன் பொருளாதார நெருக்கடிக்குள்ளாகிவிட்டது? வஞ்சக புத்தியுடன் ஜப்பான் தாக்க ஆரம்பித்தபொழுது அதற்குச் சிறந்த கடல் மார்க்கங்களிருந்தன, சிறந்த துறைமுகங்களிருந்தன, நல்ல முஸ்தீப்புகளுள்ள சாமான் கப்பற்படை இருந்தது. பொருட்படுத்தக்கூடிய ஒரு யுத்தக் கப்பற்படையும் இருந்தது. ஜப்பான் வசம் அநேக கப்பல் கட்டும் தளங்களும் இருந்தன. அங்கு நிலக்கரியாலும், டீசல் இஞ்ஜின் சக்தியாலும் ஓட்டப்படும் கப்பல்களும், சாமான் கப்பல்களும் கட்டப்பட்டு வந்தன. ஜப்பானில் தரையிலும் ஏராளமான இருப்புப்பாதைகளும் அமைக்கப்பட்டிருந்தன.

ஜப்பான் இதுவரையில் ராஜ்ய லாபத்துக்காக மூன்று போர்களை நடத்தியிருக்கிறது. 1894—95-ல் சைனாவுடன் ஒரு யுத்தம். 1904—1905-ல் ருஷ்யாவுடன் ஒரு யுத்தம். 1931-ம் வருஷத்தில் சைனாவுடன் மூன்றாவது போர். இந்தப் போர் மஞ்சூரியாவில் துவக்கப்பட்டது. 1942-ம் வருஷம் முற்பாதிக்குள் ஒரு பெரிய வல்லரசுக்கு அத்தியாவசியமான எல்லாப் பொருள்களையும் பெற்ற அநேக நாடுகளை ஜப்பான் வசப்படுத்திக்கொண்டது. இதை வினா தேர்ச்சிபெறாத ஏராளமான தொழிலாளர்களும் அதற்குக் கிடைத்துவிட்டனர்.

பிரஷ்யாவின் மாதிரி பின்பற்றப்பட்டது.

ஜப்பானியர்கள் அவர்களுடைய சேனை, போர்ப்படைகளை, போலீஸின் அடிமைகளாகி விட்டார்கள். பிரஷ்யாவின் வழியைப் பின்பற்றி ஜப்பானிய நிர்வாகம் அறுகுறையான மன்னர் ஆக்ஷியாக மாறி ராணுவ அமுலை ஆதரிக்க முற்பட்டது. ஆத்மீக முறையிலும், தேக வலிமையிலும் உள்நாட்டிலுள்ள கொடுங்கோன்மையை எதிர்த்துப்போராட ஜப்பானியர்களிடம் போதுமான முஸ்தீப்புகள் கிடையாது. அவர்களின் கலைஞானத்தில் கொடுமையும் அடிமைத்தனமும்தான் காணப்படுகின்றன. அவர்களின் நாகரீகம் கொடுங்கோன்மையும், கபடமும் ராணுவ அமுலும் நிரம்பியது. தொன்றுதொட்டு நிலைபெற்றிருப்பதும் எதேச்சாதிகாரமுள்ளதுமான ஜப்பானிய நிர்வாகம் ஜனங்களைக் கீழ்ப்படியும்படி செய்யும் சக்தியுள்ளது. சுலபமாகத் தோன்றியபோதிலும் யதேச்சாதிகார முறையை அனுஷ்டித்துவரும் அந்த நிர்வாகம் பொதுஜன வாழ்க்கையையும் தனிப்பட்டவர்களின் வாழ்க்கையையும் கட்டுப்படுத்திவருகிறது.

ஜப்பானிய ஆடவர்களும் ஸ்திரீகளும் ஸ்பார்டாவிலிருந்தவர்களைப்போல் வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். ஆடவர்கள் உறுதியுள்ளவர்களாகவும், சுலபமாக திருப்தி அடைகிறவர்களாகவும், சிக்கன முறையில் வாழ்க்கையை நடத்துகிறவர்களாகவும் இருந்து வருகிறார்கள். அவர்கள் வேறு சுகங்களை கண்டிருக்கவில்லை. ஜப்பானிலுள்ள ஸ்திரீகளின் அந்தஸ்தையும் உரிமைகளையும் உயர்த்த அவர்கள் சிறிதும் பிரயாசைப்படவில்லை. வெறிபிடித்த ராணுவ முறையின் கடுமையான போக்கை பாதிக்கக்கூடிய வகையில் ஸ்திரீகளின் செல்வாக்கு உபயோகப்படும்படியாக அவர்கள் அனுமதிப்பதில்லை. ஒரு புறத்தில் தொழில் நடத்தும் முதலாளிகளும், மற்றொரு புறத்தில் மிலியன்கள் கணக்கான ஏழ்மைத்தனமுள்ள குடியானவர்களுமிருக்க நடுநிலைமை வகிக்கும் ஜனங்கள் பத்திரமில்லாத நிலைமைக்குட்பட்டுவிட்டார்கள். அவர்களுக்கு ஸமஸ்தான அடக்கு முறையும் உதவியும்தான் ஆறுதலையளித்துவருகின்றன.

ஜப்பானியர்கள் மேனாட்டாரைப்போல் ஆடையணிந்துகொள்ளுகிறார்கள். அநேக முறைகளில் அவர்களைப்போலவே வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். முக்கியமாக வியாபார முறையிலும் தொழில் முறைகளிலும் இது காணப்படுகிறது. ஆனால் அவர்கள் மேனாட்டாரைப் போல எண்ணங்களைக்கொண்டிருக்கவில்லை. அவர்களின் நிர்வாகம் ஜனங்களைக் கொள்ளையடிக்க ஆரம்பித்தபொழுது கலகம் செய்வது, சுதந்திரத்துடனிருப்பது என்ற ஐதீகங்கள் அவர்களிடம் காணப்படவில்லை. அவர்கள் உரிமைகளைப் பெறவேண்டுமானால் அவ்விதம் செய்திருக்கவேண்டும். அவர்களின் ஷிண்டோயிஸம் என்ற மதம் அதை உலகம் அறியச் செய்யும் பாமர ஜனங்களின் ஒரு முயற்சியேயாகும். அந்த மதத்தில் முன்னோர்களிடம் பக்தியும் இயற்கையைப் பூஜை செய்வதும் கலந்திருக்கிறது. சக்கரவர்த்தி எல்லோரையும் ஒன்றுபடுத்தும் தெய்வீகப் பிறவி என்று கருதப்பட்டார். இவ்விதமான பூகோள,

மத சம்பந்தமான, பொருளாதார அடிப்படையைக்கொண்ட ஜப்பான் பெர்ல் துறைமுகத்துக்கு முன் மிகுதியான வலிமையைப்பெற்று அதன் பிறகு எழ்மைத்தனத்தை அடைந்ததற்குக் காரணங்கள் தெளிவானவை.

தூரக்கிழக்கில் அக்கிரமப்போரை நடத்திவரும் ஜப்பானுக்கு 1942-ம் வருஷத்தின் முதற் பாதியில் கிடைத்த லாபங்களை அபலாபப்படுத்தவும் அவைகளை ஒன்று திரட்டவும் அவகாசம் வேண்டும். இதுதான் அதற்குக் கிடைக்கவில்லை.

முறியடிக்கப்பட்ட ஜனங்களுக்குக் கொடுமை.

ஜப்பான் அகலக் காலை வைத்ததுதான் இந்த நிலைமைக்குக் காரணம். மேலும் முறியடிக்கப்பட்ட ஜனங்களின் துவேஷத்தை ஆபாசமான, கொடுமையுள்ள, அக்கிரமமான நடத்தைகளால், சம்பாதித்துவிட்டது. ஜப்பானிய சாம்ராஜ்யத்தின் 2605-வது வருஷத்தில் பொருளாதார நிலைமையில் சங்கடம் ஏற்பட்டிருக்கிறதென்பதில் ஒரு ஆச்சரியமுமில்லை. இவ்வருஷ ஆரம்பத்தில் ஜப்பானிய நிர்வாகம் கொண்டுவந்த எல்லா மசோதாக்களையும் ஆதரிக்கும்படிக்கும் அவைகளை சட்டமாக்கும்படிக்கும் தேசமக்களின் உணர்ச்சியை உண்டு பண்ண சாம்ராஜ்ய ஆக்ஷி உதவி ராஜீய சங்கம் தீவிரமான முயற்சி செய்துவந்தது.

உற்பத்தி, கப்பல்கள், உணவுப் பொருள்கள், ஆடைகள், தொழிலாளர்கள், கோசம், உள்நாட்டு தற்காப்பு முதலிய பிரச்னைகளிலெல்லாம் ஜப்பானுக்கு சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. டோஜோ ஜப்பானின் விமான பலத்தையும் கடற்பலத்தையும் அதிகரிக்க வேண்டியது அவசியமென்று வற்புறுத்தினன். அவைகளுக்கு இரும்பும், எஃகும் லேசான உலோகங்களும் தேவைப்படும். அத்துடன் தரை. கடல் போக்குவரத்துகள் அதிகரிக்கவேண்டும். தொழிலாளப் படையும் விஸ்தரிக்கப்படவேண்டும். 1943-ம் வருஷம் இலையுதிர் காலத்தில் 150 முக்கியமான தொழிற்சாலைகளை யுத்த தளவாடக் கம்பெனிகளாக மாற்றி கவர்ன்மெண்டார் வெளியிட்டார்கள். அவைகளுக்கு முகான்மையாக தாதுப்பொருள்களும் சமஸ்தான பொருளுதவியும் அளிக்கப்பட்டன. விமானங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. போக்குவரத்தைக் குலைக்க ஆங்காங்கு சிலாக்கியமில்லாத இரும்பு உலோகத்தை உருக்குவதற்கு நிர்மாணிக்கப்படவேண்டிய அநேக உலைகளை அமைக்கும் திட்டம் இன்னும் பூர்த்தியாகவில்லை. நெசவு, யந்திர ஆயுதங்கள், எண்ணெய், மின்சாரம் முதலியன சம்பந்தமான மற்ற முக்கியமான தொழிற்சாலைகளுக்கும் அதிக நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

கப்பல்தான் ஜப்பானின் பலஹீனமான அம்சம். சர்பரா மார்க்கங்களை பத்திரமாகப் பாதுகாப்பது அத்தியாவசியமென்று டோக்கியோ ரேடியோவில் அழுத்தமாகச் சொல்லப்படுகிறது. சாமான் கப்பல்களுக்குக் கடலிலும் ஆகாயத்திலும் துணைக்காவல் புரிவதன் மூலம் நஷ்டங்களைக் குறைத்துவிடுவதென்றும் ஜப்பான் எண்ணம் கொண்டிருக்கிறது. தெற்கு பஸிபிக்கிலுள்ள தீவுகளில் தளவாடங்கள் குவிக்கப்படுவதும், மத்திய பஸிபிக்கிலுள்ள அநேக தளங்களைக் கைவிடுவதும் அந்த வியாதியின் அறிகுறிகள். கடல் தாண்டியுள்ள ஒரு சாம்ராஜ்யத்திற்கு ஜீவனாடி போன்ற சாமான் கப்பற்படையில் குறைவு ஏற்பட்டிருக்கிறதென்று தெரியவருகிறது.

உள்நாட்டு நிலைமை.

பிரதிநிதி சபைக்கு அறிவிப்புச் செய்தபொழுது 1944-ம் வருஷத்தில் உணவுப்பொருள் நிலைமையில் நெருக்கடி ஏற்படுமென்று யாமஸாகி வெளியிட்டார். அரிசிக்குப் பதிலாக பாக்ஸைட்டை அனுப்புவதில் ஜப்பான் முக்கிய கவனம் செலுத்திவருகிறது. 1 மிலியன் டன்கள் அரிசி அனுப்பக்கூடிய கப்பல்களில் 25,000 விமானங்களுக்குத் தேவையான அலுமினியம் கொண்டுபோகப்படலாமென்று சொல்லப்படுகிறது. ஜப்பானியர்கள் ஆகார முறையையும் மாற்றிக்கொண்டுவிட்டார்கள். அரிசிக்குப் பதிலாக கோதுமை, உருளைக் கிழங்கு, அவரைக்காய் முதலியவற்றை அவர்கள் சாப்பிடுகிறார்கள். ஆடைப் பங்கீடு பாதியாக்கப்பட்டுவிட்டது. நகரவாசிகளுக்கும் அரைப்பங்குதான் ஆடை அளிக்கப்படுகிறது. பட்டு, உரோமம், காட்டன் ஆடைகளுக்கு 30 சதவிகிதம்தான் பங்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

யுத்த வேலையில் ஈடுபடுவதற்காக அநேக ஸ்திரீகளும், மாணவர்களும், பாதிரிகளும் திரட்டப்பட்டிருக்கிறார்கள். 12 வயது முதல் 60 வயது வரை உள்ள ஆடவர்களும், 12 வயது முதல் 40 வயது வரை ஸ்திரீகளும், 15 முதல் 45 வயது வரை உள்ள பாதிரிகள் தங்களுடைய பாதிரி ஆடைகளைக் களைந்துவிட்டு யுத்த தளவாட தொழிற்சாலைகளில் வேலை செய்யவேண்டும். கொரியாவிலுள்ளவர்களில் அநேகரும், சீனர்களும் மஞ்சூரியாவிலுள்ள நிலங்களிலும் ஜப்பானிய நிலக்கரிச் சுரங்கங்களிலும் வேலை செய்யும்படி கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

ஜப்பானியர்கள் மற்ற வகைகளிலும் சிக்கனம் செய்து வருகிறார்கள். 1944-ம் வருஷத்திய வரவு செலவு திட்டத்தில் செலவு 51,000 மிலியன் யென் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது 1943-ம் வருஷத்தைவிட 8,000 மிலியன்கள் உபரியான செலவாகும். ராணுவச் செலவு 38,000 மிலியன் யென் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. தேசீய வருமானம் 60,000 மிலியன் யென் என்று சொல்லப்படுகிறது. ஜனங்களின் வாழ்க்கைச் செலவிற்கு 11,600 மிலியன் யென்தான் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. 1941-ம் வருஷத்தில் அது 19,500 மிலியன் யென்னாக இருந்தது. ரயில்வே கட்டணங்கள் அதிகமாகயிருக்கின்றன. பொதுஜன உபயோகத்துக்குரிய சாமான்களுக்கும் அதிகவரி விகிதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

சுருங்கச் சொன்னால், ஜப்பானுக்குப் பகட்டாக அநேக லாபங்கள் கிடைத்தபோதிலும் அந்த லாபங்களைப் பயன்படுத்த அதற்கு அவகாசம் போதவில்லை. போதுமான கப்பல்களில்லாததினால் ஜப்பானின் பெரிய ஆசியா சமக்ஷேம திட்டமானது ஜப்பானிலுள்ளவர்களுக்கும், பர்மா, தெற்கு பஸிபிக் தீவுகளிலுள்ள பொதுஜனங்களுக்கும் கஷ்டங்களை உண்டு பண்ணிவிட்டது.

ஜப்பானிய ராணுவ அதிகாரிகளின் இழிவான குற்றம்.

நேசதேசக் கைதிகளை நடத்திய முறை.

தூரக்கிழக்கின் தெற்குப் பிராந்தியத்தில் ஜப்பானியர் வசமிருந்த பிரிடிஷ் ஆஸ்திரேலிய யுத்த கைதிகளின் துன்பங்களைப்பற்றி பிரிடிஷ் யுத்த மந்திரி காமன்ஸ் சபையில் வெளியிட்ட அறிக்கையிலிருந்து, ஜப்பானியர் வசமுள்ள கைதி முகாம்களைப் பார்வையிட அனுமதிக்க ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் மறுத்ததிலிருந்து ஏற்பட்ட பீதி ஊர்ஜிதப்படுகிறதென்று டைம்ஸ் பத்திரிகை எழுதுகிறது.

அமெரிக்க நீர்மூழ்கி மாலுமிகள் அபாயத்துக்குட்பட்டு தீரத்துடன் மீன் வெடியால் உடைபட்ட கப்பலிலிருந்து தப்பியவர்களைக் காப்பாற்றி இராவிடில் பர்மாவுக்கும், ஸியாமுக்கும் இடையிலுள்ள வனாந்திரத்தில் நடைபெற்ற கோரமான நாடகத்தைப்பற்றி உலகம் அறிந்திருக்கமுடியாது. இப்பொழுது உண்மைகள் ஊர்ஜிதமாகிவிட்டதால் அவைகளுக்கு ஜவாப்தாரியானவர்களைக் கடுமையான சிக்ஷைக்குட்படுத்தினால்தான் மானிட வர்க்கத்தின் ஆன்மா திருப்தியடையும்.

யுத்தக் கைதி முகாம்களின் நிலைமை மாறுபாடாக இருக்கின்றதென்று தெரியவருகிறது. ஜப்பானிய ஸிவில் அதிகாரிகள் செல்வாக்கை உபயோகிக்கக்கூடிய இடங்களில் கைதிகளை நடத்துவது சற்று சகிக்கக்கூடியதாக இருக்கிறது. சேனையைச் சேர்ந்த அதிகாரிகள்தான் கடுமையான குற்றம் செய்தவர்கள். அவர்களுடைய நடத்தை ஐரோப்பியர்களைக் கொடுந்துன்பத்துக்குள்ளாக்கவேண்டுமென்ற அவர்களின் பெருமைக்கும், காட்டுமிராண்டித்தனத்துக்கும் நேசதேச வசமுள்ள ஜப்பானிய யுத்தக் கைதிகளின் அக்கரையில் சிறிதுகூட கவலையில்லாத மனப்பான்மைக்கும் ஒத்ததாக இருக்கிறது. ஜப்பானிய ஸோல்ஜர் வெற்றி பெறவேண்டும் அல்லது உயிர் துறக்கவேண்டுமென்பதுதான் அவர்களின் அபிப்பிராயம். ஜப்பானியக் கைதிகளை நேசதேசத்தார் பச்சாத்தாபத்துடன் நடத்தும் முறைகள் ஜப்பானிய அதிகாரிகள் நடத்தையை பாதிக்கக்கூடவில்லை.

இவ்விதமாக ஜப்பானியரை ராணுவ அதிகாரிகளிடமுள்ள நேசதேச யுத்தக் கைதிகளின் கஷ்டங்களை நிவர்த்திக்க இப்பொழுது ஒன்றும் செய்யக்கூடியதாக இல்லை. இந்த முகாம்களை நடத்துகிறவர்கள், அந்த நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாளிகளாக இருப்பவர்கள் இவர்கள் மனதில் யுத்தத்தின் அவசியத்தினால் அவர்களின் சார்ஜில் ஒப்படைக்கப்பட்டிருக்கும் தீரர்களின் உயிர்களுக்கும், க்ஷேமத்திற்கும் மானிட நீதிமுறைப்படிக் கடுமையான முறையில் அவர்கள் ஜவாப்தாரியாக இருக்கவேண்டுமென்பதை சந்தேகமறப் பதியும்படி நேசதேசத்தார்கள் உத்தரவாதம் செய்யவேண்டும்.

யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

(15) புஷ்டிப் பொருள்.

சொற்பொழிவாளர்கள் :—மிஸ்டர் விக்ஹாம் ஸ்டீட் (தலைவர்).
ஸர் ஜான் பாயிட் ஆர்.
கர்னல் நார்மன் வாக்கர்.

(1944ஆம் அக்டோபர் 2-ம் தேதியன்று கிழக்கு நாடுகளுக்குச் செய்யும் ஒலிபரப்பு பிரசங்கம்).

ஸ்டீட்: நமது முதல் இரண்டு சர்ச்சைகளில் நாம் உணவுப்பொருள் உற்பத்தியைப்பற்றி விவரித்தோம், இன்று உணவுப்பொருளின் புஷ்டி என்ற அம்சத்தைப்பற்றிப்

பேசுவோம். இந்த விஷயம் எனக்குப் புதிதானது. நான் பையனாக இருந்தபொழுது காலரி என்றும், புரதமென்றும் வைட்டமின் என்றும் கேள்விப்பட்டதில்லை. ஸர் ஜான் பாயிட் ஆர், இந்த விஞ்ஞான சாஸ்திரம் 30 வருடங்களாகத்தான் ஏற்பட்டிருக்கிற தென்று நான் நினைப்பது தவறு.

ஸர் ஜான்: இல்லை. உங்களுடைய அபிப்பிராயம் சரியானது. இது 30 வருடங்களாக இருந்து வருகிறது. அதற்கு முன் தேக ஆரோக்கியத்துக்குரிய சில அம்சங்கள் உணவுப்பொருள் களிலிருக்கின்றனவென்று மட்டும் விஞ்ஞான சாஸ்திரிகள் அறிந்துவந்தார்கள். இந்த விஷயத்தில் கொஞ்சம்கூட கவனம் செலுத்தப்படவில்லை. உணவுப்பொருள்களில் மேலே சொல்லப்பட்ட பொருள்கள் குறைவாக இருப்பதினால் பெரி பெரி என்ற வியாதி உண்டாகுகிறதென்று கண்டுபிடிக்கப்பட்டது. அதன்பின், கணைச்சூடு, சொறி, கரப்பான், ரத்தமின்மை வியாதிகளும் இந்தப் பொருள்களின் குறைவினால் ஏற்படுகின்றனவென்று கண்டுபிடிக்கப்பட்டது.

ஸ்மிட்: இதற்குப் பின்தான் புஷ்டிப் பொருளை ஆதரிப்பவர்கள் இந்த வியாதிகளைத் தடுக்கக் கூடிய பொதுவான உணவுப்பொருள்களின் திட்டத்தை ஏற்படுத்தினார்கள் அல்லவா?

ஸர் ஜான்: அநேக வருஷ ஆராய்ச்சிக்குப் பின்தான் இது சாத்தியமாகிற்று. 1935-ம் வருஷத்தில் தேக ஆரோக்கியத்துக்கு ஒவ்வொரு பொருளிலும் எவ்வளவு அத்யாவசிய மானவை என்பதை விஞ்ஞான சாஸ்திரிகள் நிர்ணயிக்க முடிந்தது. அவர்கள் உணவுப் பொருள் திட்டத்தை நிறுவினார்கள்.

ஸ்மிட்: இந்த நூதனமான ஆராய்ச்சி மூலம் புஷ்டிப்பொருள்களின் தரத்தை இந்த நாட்டில் மிகுதியாக அதிகரித்திருக்கிறோமா?

ஸர் ஜான்: ஆம். இந்த ஆராய்ச்சி ஒரு காரணம். பிரிடனிலுள்ள தொழிலாளர்களின் பொருளாதார நிலைமை துரிதமாக அதிகரித்ததுதான் இதற்கு முக்கிய காரணம். சென்ற யுத்தத்துக்கு முன்னும், இந்த யுத்தத்துக்கு முன்னும் உட்கொள்ளப்பட்ட பால், தயிர் முதலிய பொருள்கள், கனிவர்க்கம், காய்கறிகள் போன்ற புஷ்டிப் பொருள் களின் அளவை ஒத்துப்பார்த்தால் அவைகள் 50 சத விகிதம் அதிகரித்திருக்கின்றன வென்று அறியக்கூடும். அதன் பயனாக பொதுமக்களின் ஆரோக்கியமும் தேக புஷ்டியும் அதிகரித்திருக்கின்றன. புஷ்டிப்பொருள் குறைவினால் ஏற்பட்டிருந்த வியாதிகள் எல்லாம் நிவர்த்தி செய்யப்பட்டன. சிசு மரணமும், T. B. மூலம் சாவும் செம்பாதி குறைந்துவிட்டன. பள்ளிக்கூடத்தை விட்டுச் செல்லும் குழந்தைகளும் அவர்களின் பெற்றோர்கள் அந்த வயதில் வளர்ச்சி பெற்றிருந்ததைவிட மூன்று அங்குலம் அதிக உயரமாக இருந்தார்கள்.

ஸ்மிட்: இந்தியாவின் புஷ்டிப்பொருளைப்பற்றி சர்ச்சை செய்யும்பொழுது அதன் ஏழ்மைத் தனத்தையும் கவனிக்கவேண்டும். கர்னல் நார்மன் வாக்கர், இந்தியாவில் இந்த பிரச்னையை எவ்விதம் தீர்க்கலாமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்.

கர்னல் நார்மன் வாக்கர்: இந்தியா பூராவிலும் இந்த விஷயத்தை அமுலுக்குக் கொண்டுவர முடியாது. இதை ஒவ்வொரு மாகாணத்திலும் ஏற்பாடு செய்யவேண்டும். முதலாவதாக, ஜனங்களின் முக்கியமான உணவுப்பொருள்களிலும் அவர்களுடைய மத ஆஸ்பதமான பழக்கவழக்கங்களிலும் நாம் குறுக்கிடக்கூடாது. இந்தியர்களுக்கு சமத்துவமான ஆகாரமிருக்கும்படியாக புஷ்டிப்பொருள்களையும் வழங்கவேண்டும். இன்று உணவுப் பொருள்களில் சமத்துவம் கிடையாது. இந்தியாவிலுள்ள போஷணைக் குறைவுக்கு ஜனங்களின் ஏழ்மைத்தனம்தான் காரணமென்று நான் பூராவாக நம்பவில்லை. ஏனெனில் இஷ்டம்போல் வளரக்கூடிய பணக்காரர்களின் ஆகாரமும் மிகவும் சமத்துவக் குறைவுள்ளதாக இருக்கிறது.

ஸர் ஜான்: போஷணைக் குறைவுக்கு ஏழ்மைத்தனம்தான் காரணம் என்று ஒப்புக் கொள்ளுவீர்களா?

கர்னல் நார்மன் வாக்கர்: ஏழ்மைத்தனம் காரணமில்லையென்று நான் சொல்லவில்லை. அது மட்டும் காரணமில்லையென்று நான் சொல்லுகிறேன்.

ஸர் ஜான்: ஆகிலும் இந்தியாவில் ஏழ்மைத்தனம்தான் முக்கியமான பிரச்னை.

கர்னல் நார்மன் வாக்கர்: அநேகர்கள் ஜீவனைக் காப்பாற்றிக்கொள்ளும் நிலைமைக்குச் சற்று உயர்வான நிலைமையில்தானிருக்கிறார்களென்று எல்லோரும் அறிவார்கள்.

ஸர் ஜான்: இன்னும் அநேகர்கள் கண்யமான வாழ்க்கையைக்கூட நடத்தமுடியாமலிருக் கிறார்கள்.

கர்னல் நார்மன் வாக்கர்: இந்தியாவில் ஏழ்மைத்தனம் ஒரு அம்சமே ஒழிய அதுதான் ஒரு காரணமல்ல. மற்றொரு காரணம் ஹிந்துக்களின் ஜன சமூக, மத சம்பந்தமான பழக்க வழக்கங்கள் சமத்துவமில்லாத உணவை உட்கொள்ளும்படி அவர்களைத் தூண்டுகிறது.

ஸர் ஜான்: இந்தப் பழக்கவழக்கங்கள் பிரச்னையை சிக்கலாகச் செய்துவிடுகின்றன. ஆகிலும் பசியால் வாடுகிறவர்களுக்குப் போதுமான உணவுப்பொருள் இந்தியாவில் கிடையாது.

கர்னல் நார்மன் வாக்கர்: அது பருவகாலத்தைப் பொருத்தது. நல்ல பருவகாலத்தில் இந்தியாவில் மிகுதியிருக்கிறது.

ஸ்டீட்: இந்தியக் குடும்பத்தின் நிரந்தரமான உணவுப்பொருள் என்ன?

கர்னல்: இது பல்வேறு பாகங்களில் வித்தியாசப்படுகிறது. வடக்கு இந்தியாவில் உறுதியுள்ள சீக்கியர்களும், ஜாட்களும் கோதுமையையும், பாலையும், உட்கொள்ளுவதால் அவர்கள் திடகாத்திரமுள்ளவர்களாக இருக்கிறார்கள். இந்தஜனங்களிடையே போஷணைக் குறைவு கிடையாது. போஷணைக் குறைவு ஒரு முக்கியமான வியாதி. நகரங்களிலுள்ள ஏழை மக்களிடம் இந்த வியாதியை எளிதில் கண்டுபிடித்துவிடலாம். இந்த வியாதி நாட்டுப்புறங்களில் அதிகமாகக் காணப்படவில்லை. இந்தியா ஏழ்மையுள்ள தேசம். ஆகிலும் பொதுமக்கள் உள்ள உணவுப்பொருள்களைக்கொண்டு திருப்தி அடைந்து விடுகிறார்கள். இவ்விதமாக மற்ற நாடுகள் இருக்கமுடியாது.

ஸ்டீட்: ஆகையால் இந்தியாவில் பணக்காரர்களும், ஏழைகளும் சமத்துவமில்லாத உணவுப் பொருளை உட்கொள்ளுகிறார்களா?

கர்னல்: இல்லை. பால் மிகுதியாக உள்ள வடமேற்கு இந்தியாவில் அவ்விதமில்லை. அங்கு நிலைமை விசேஷமானது. அங்கும் 1935-ம் வருஷம் முதல் உட்கொள்ளும் ஆகாரம் குறைந்துவிட்டது. எந்தக் குறைவையும் பால் சரிக்கட்டிவிடுமென்று ஸர் ஜானும் ஒப்புக்கொள்ளுவார்.

ஸர் ஜான்:—ஆம். ஆனால் எல்லோரும் போதுமான பாலைப் பெறமுடியாது. எந்த நாட்டிலும் போஷணைக் குறைவுக்கு ஏழ்மைத்தனம்தான் முதல் காரணமென்று நினைக்கிறேன்.

ஸ்டீட்: நார்மன், சமத்துவமில்லாத ஆகாரத்திற்கு அஞ்ஞானமும் ஏழ்மைத்தனமும் காரணமென்று நினைக்கிறீர்களா?

கர்னல்: ஏழ்மைத்தனம் காரணங்களில் ஒன்று. செல்வமுள்ள ஹிந்து சாப்பிடும் உணவில் ஸ்டார்ச் அதிகமாக இருக்கிறது. அவன் கனிகளையும், காய்கறிகளையும் வாங்கி உட்கொண்டு போஷணைக்குறைவினால் ஏற்படும் அநேக தொந்திரவுகளைத் தவிர்த்துவிட வேண்டும். ஆகிலும் அவனுடைய அரிசி நன்றாய் தீட்டிவிடப்படுகிறது. ஊரில் பெரிபெரி இருக்கும்பொழுது அவனுக்கும் அது சீக்கிரம் பரவும்.

ஸ்டீட்: ஸர் ஜான், புஷ்டிப்பொருள்களில் பால் மிகவும் முக்கியத்துவமுள்ளதென்று சொல்லுகிறீர்களா.

ஸர் ஜான்: ஆம். ஏனெனில் பாலில் ஆகாரத்தில் குறைவாக உள்ள வைட்டமினும் தாதுப் பொருள்களுமிருக்கின்றன. இருபது வருஷங்களுக்குமுன் ஸ்காட்லாந்தில் பரிசைஷ செய்து பார்க்கப்பட்டது. பள்ளிக்கூடத்திலுள்ள குழந்தைகளுக்கு அவர்கள் ஆகாரத்தைத் தவிர தினசரி ஒரு பைண்ட் பால் கொடுத்துவந்தபொழுது அவர்களுடைய ஆரோக்கியத்திலும் தேக சக்தியிலும் விருத்தி ஏற்பட்டது. அவர்களின் வளர்ச்சியும் 20 சத விகிதம் அதிகரித்தது. இதேவிதமாக எல்லா நாடுகளிலும் பரிசைஷ செய்திருக்கிறார்கள். உணவுப்பொருள் கெடுதலாக இருக்கும் இடங்களில் பாலின் மூலம் தேக ஆரோக்கியம் அதிகரித்திருக்கிறது.

ஸ்டீட்: இந்தியாவின் பால் ஸப்ளையைப்பற்றிதான் என்ன சொல்லுகிறீர் ?.

கர்னல் நார்மன் வாக்கர்: வடமேற்கைத் தவிர மற்ற இடங்களில் பால் ஸப்ளை குறைவாகத் தானிருக்கிறது. இந்தியாவில் ஏராளமான கால்நடைகளிருந்தபோதிலும் அதில் மூன்றில் இரண்டு பாகம் ஜீவனத்தை உட்கொண்டபோதிலும் யாதொரு பாலையும் கொடுப்பதில்லை. அவைகளின் தோல்தான் உபயோகப்படுகின்றன.

ஸர் ஜான்: இந்தியாவின் கால்நடை பிரச்னை மிகவும் முக்கியமானது. அங்கு 200 மிலியன் கால்நடைகளிருக்கின்றன. இந்தியாவிலுள்ள பசுவின் சராசரி பால் உற்பத்தி ஒரு வருஷத்திற்கு 60 காலன்தான். இங்கிலாந்தில் சராசரி 600 காலன் பால் கிடைத்து விடுகிறது. மேலும் இந்தியாவிலுள்ள கால்நடைகளில் மூன்றில் இரண்டு பாகத்துக்குப் போதுமான மேய்ச்சல் பொருள்தான் இருக்கிறது.

கர்னல் நார்மன் வாக்கர் : மேலும் கர்ப்ப ஸ்திரீக்கும், சிறு குழந்தையை வளர்க்கும் தாய்க்கும் போதுமான பால் கிடைப்பதில்லே. குழந்தையின் தாயார் செத்துப்போய்விட்டால் குழந்தை நிச்சயமாக இறந்துவிடும். சிசு மரணமும் அபாரமாகயிருக்கிறது. கணக்கிட முடியாதது. ஏனெனில் ஜனக்கணிதப் பதிவும் சரிவர நடைபெறவில்லே.

ஸிர் ஜான் : இது உண்மைதான். இந்தியாவில் ஜனங்களில் தேவைக்குப் போதுமான பால் கிடையாது. ஆனல் சாதாரண காலங்களிலும், ஆஸ்திரேலியாவிலும், நியூஸிலாந்திலும் பால் அபரிமிதமாக இருக்கிறது. சில சமயங்களில் காய்ந்த மேலிடும் அதிகமாக இருக்கிறது. நியூஸிலாந்திலிருந்தும், ஆஸ்திரேலியாவிலிருந்தும் காய்ந்த பாலிடை அனுப்புவதன் மூலம் இந்திய ஜனங்களின் போஷணையை அதிகரித்துவிடலாம். உலக உணவுப்பொருள், விவசாய சங்கம் இதைத்தான் முதல்முதலில் கையாளவேண்டும்.

ஸ்டீட் : அவர்கள் அவ்விதம் செய்தால் நல்ல பயன் கிடைக்கும். இந்தியாவில் ஏற்படுவதாகச் சொல்லப்படும் மரணம் 10 வயதுக்குட்பட்ட சிசுக்களைப் பொருத்தது. அதற்குக் காரணம் போஷணைக் குறைவுதான். அடுத்தபடியாக குடி தண்ணீர் பிரச்னை இருக்கிறது. நல்ல சுத்தமான ஜலம் இந்தியாவில் கிடைக்கிறதா?

கர்னல் நார்மன் வாக்கர் : இல்லே. அநேக இடங்களில் கிடைக்கும். தண்ணீர் அசுத்தமானது. ஆனல் தண்ணீர் ஸப்ளேக்கு அதிகப் பொருள் செலவிடவேண்டும். அதாவது பொருளே முதலீடு செய்யவேண்டுமென்று நான் சொல்லுகிறேன். ஏனெனில் நல்ல ஜல ஸப்ளே உள்ள டவுனில் கஷ்டமேற்படுகிறதில்லே. இந்தியாவில் அநேக நகரங்களில்இன்னும்நல்ல குடி தண்ணீர் வசதி கிடையாது. அநேக இடங்களில் கேணித் தண்ணீர் உபயோகப்படுத்தப்படுகிறது. கிராமங்களில் உள்ள கிணறுகள் அநேகமாகத் தரைமட்டத்திற்குமேல் கட்டப்படாததால் அவைகளிலுள்ள ஜலம் அசுத்தமடையக்கூடியவை. இந்தக் கிணறுகள் மூலம்தான் காலரா போன்ற மற்ற தொத்து வியாதிகள் பரவுகின்றன.

ஸ்டீட் : உணர்ந்த பாலே இந்தியாவில் இறக்குமதி செய்தாலும் அது உட்கொள்ளுமுன் அசுத்தி அடைந்துவிடும். அவ்விதம் நடைபெறுவதை தடுக்கவேண்டுமானல் நல்ல ஜலத்திற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

கர்னல் நார்மன் வாக்கர் : இந்தியாவில் போஷணைக் குறைவை சீர்திருத்த முதல் கட்டமாக நகரங்களிலும், கிராமங்களிலுமுள்ள தண்ணீர் ஸப்ளேயைத் திருத்தியமைக்கவேண்டும், கால்நடைகளுக்கு ஏற்பட்டிருக்கும் ஜல ஸப்ளேயையும் இதில் சேர்த்துக்கொள்ள வேண்டும். சில இடங்களில் போதுமான ஜல ஸப்ளே கிடைப்பதே சிரமசாத்தியமாகும். ஜல ஸப்ளே அற்றுப்போய்விட்டதினல் பஞ்சு ஆலேகள் அநேக நூற்றுக்கணக்கான மைல்கள் கொண்டுபோகப்பட்டு அமைக்கப்பட்டதை நான் அறிவேன்.

ஸிர் ஜான் :—இது மிகவும் முக்கியமானது. இந்தியாவின் உணவுப்பொருள் உற்பத்தியை அதிகரிக்க நீர்ப்பாசன வசதி அத்தியாவசியம் என்பதையும், சுத்தமான குடி தண்ணீரும் மெத்த அவசியம் என்பதையும் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். இந்தியாவில் ஜல ஸப்ளே என்பது இஞ்சினியரிங் இலாகாவின் பிரச்னேயல்லவா?

கர்னல் நார்மன் வாக்கர் : அடுத்தாற்போல் நிலங்களுக்கு எருப்போடும் பிரச்னே இருக்கிறது. இந்தியாவில் ஒரு நிலம் இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டது. ஒரு பாதியில் எருப் போடுகிருர்கள். மற்றென்றில் போடுவதில்லே. இரண்டும் பின்பு சாகுபடி செய்யப்பட்டன. உரம் போடப்பட்ட செய் உரம் போடாத செய்யைவிட ஐந்து மடங்கு பலனேக் கொடுத்தது.

ஸ்டீட் : இயற்கையான எரு குறைவாகயிருந்தால் அதற்குப் பதிலாக சேர்மான எருவை உபயோகிக்கலாமா?

ஸிர் ஜான் : ஆம். நைட்ரேட்ஸ், பாஸ்பேட்ஸ் முதலியவற்றை ஒரு சிறிது உபயோகிக்கலாம். இவைகளுடன் ஈரத்தைக் காப்பாற்றி வைத்துக்கொள்ளக்கூடிய சக்தியும் பூமிக்கு இருக்கவேண்டும். ஈரத்தைக் காப்பாற்றி வைக்கக்கூடிய சக்தி இந்தியாவிலுள்ள நிலங்களுக்குப் போதுமானதல்ல. மேலும் இந்தியாவில் பசும் சாணத்தை எருவாக உபயோகிக்காமல் அடுப்புக்கு வராட்டியாக உபயோகித்து வருகிருர்கள்.

ஸ்டீட் : நெய் சமாசாரம் என்ன?

கர்னல் நார்மன் வாக்கர் : இந்த உணவில் நெய் ஒரு முக்கியமான அம்சம். இதுவும் பால் உற்பத்தி அளவை நம்பியிருக்கிறது.

ஸ்டீட் : தகப்பனர், தாயார், மூன்று குழந்தைகள் உள்ள குடும்பத்தில் பால் யாருக்கு முகான்மையாகக் கொடுப்பது.

கர்னல் நார்மன் வாக்கர் : கர்ப்பஸ்திரீகளுக்கும், சிறிய குழந்தையை போஷித்துவரும் தாயாருக்கும் முதலில் பால் ஸப்ளே செய்யப்படவேண்டும்.

ஸர் ஜான்: கர்னல் நார்மன் சொல்லுவது முற்றிலும் சரி.

கர்னல் நார்மன் வாக்கர்: பாலுக்கு அடுத்தபடியாக காய்கறிகளையும், அதற்குப்பின் முட்டைகளையும், கசாப்பையும் உபயோகிக்கலாம். இந்தியாவில் சுலபமாகப் பயிரிடக்கூடிய காய்கறிகளிருக்கின்றன. அவைகளைப் பயிர் செய்ய தூண்டுகோல் வேண்டும்.

ஸர் ஜான்: அவர்களுக்கு மிகுதியான பால் கட்டியையும், மிகுதியான காய்கறிகளையும் அதன்பின் வேண்டிய தின்பண்டங்களையும் அபரிமிதமாகக் கொடுக்கவேண்டும்.

கர்னல் நார்மன் வாக்கர்: ஆம். பாலும் காய்கறிகளும்தான் மனித வர்க்கத்தின் ஆரோக்கியத்துக்குறிய உணவுப்பொருள்கள் என்று மாகாரிஸன் சொல்லுகிறார்.

ஸ்டீட்: கிராமங்களில் லெட்யூஸையும் கீரையையும் பயிர் செய்கிறார்களா?

கர்னல் நார்மன் வாக்கர்: சில இடங்களில் அவர்கள் கிழங்குப் பயிர்களைத்தான் பயிரிடுகிறார்கள்.

ஆனால் விஷமில்லாத பச்சை இலைகள் உண்மையாக உபயோகமுள்ளவை.

ஸர் ஜான்: ஆம். அவைகள் எவ்வளவுக்கெவ்வளவு பசுமையாயிருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு நலம்.

கர்னல் நார்மன் வாக்கர்: அவற்றில் வைட்டமின் C இருக்கிறது. ஆரஞ்சுகளும் டொமட்டோக்களும் கிடைக்குமானால் நலம். இந்தியாவில் ஆரஞ்சை எல்லோரும் சாப்பிடுவதில்லை. டொமட்டோ கிடைப்பதில்லை.

ஸ்டீட்: போஷணை விஷயத்தில் இந்தியா கற்றுக்கொள்ளக்கூடிய விஷயம் ருஷ்யாவில் ஏதேனும் இருக்கிறதா.

ஸர் ஜான்: நமக்கும் இந்தியாவிற்கும் போதிக்கக்கூடிய அநேக விஷயங்கள் ருஷ்யாவில் அநேகமிருக்கின்றன. மற்ற எந்த நாடுகளையும்விட ருஷ்யா போஷணை திட்டத்தை சீக்கிரமாக நிறுவிவிட்டது. நான் ருஷ்யாவுக்குச் சென்றிருவிட்டாலும் கேள்விப்பட்டமட்டில் ருஷ்யா அந்த திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்து விட்டதென்று தெரியவருகிறது. ஸ்திரீகள் பேரிலும், குழந்தைகள் பேரிலும் அங்கு அதிகம் கவனம் செலுத்தப்படுகிறது. உபயோகமற்றதென்று எண்ணின நிலங்கள் நவீன யந்திர சாதனங்களின் மூலம் சாகுபடி செய்யப்படுகின்றன. அங்கு உணவு உற்பத்தி அதிகரித்திருக்கிறது. வாழ்க்கை முறையும் உயர்ந்துவிட்டது. இந்தியாவிலும் நல்ல முயற்சி எடுத்துக்கொண்டால் அவ்விதம் செய்துவிடலாம்.

கர்னல் நார்மன் வாக்கர்: மத சம்பந்தமான விதிகளையும், பிராசீனமான பழக்க வழக்கங்களையும் நாம் அப்புறப்படுத்தவேண்டும். சிலர் மீனையும் முட்டையையும் சாப்பிடுவதில்லை. ஜனத்தொகையின் பெரும்பாகம் மாமிசம் சாப்பிடுகிறதில்லை. எல்லோரும் பழங்களைச் சாப்பிடுவார்கள்.

ஸ்டீட்: ரொட்டி சாப்பிடுவார்களா?

ஸர் ஜான்: ரொட்டியும் தீட்டப்பட்ட அரிசி போன்றதுதான். இயந்திரத்தில் அரைக்கப்பட்ட மாவிலிருந்த வைட்டமின் அதில் காணப்படவில்லை. யந்திர சாதனத்தை வைத்துக்கொண்டு மாவிலுள்ள முக்கியமான வைட்டமினையும் ஏன் காப்பாற்றக் கூடாதென்று எனக்குப் புரியவில்லை.

ஸ்டீட்: இந்தியாவில் போதுமான உணவுப்பொருள்களை எவ்விதம் அடைவது என்பதை நாம் இன்றும் முடிவு செய்யவில்லை.

கர்னல் நார்மன் வாக்கர்: இந்தப் பிரச்னையை கல்வி இலாகாதான் தீர்த்துவைக்கவேண்டும். கல்வி இலாகா பிரதிநிதிகள் போஷணை ஆலோசனைக் கமிட்டியில் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும்.

ஸர் ஜான்: இந்தியாவின் பூரா ஜனங்களுக்கும் ஆரோக்கியமுள்ள ஆகாரத்தை வெகு காலத்துக்கு பெற்றுவிடமுடியாது. முதல் முதலாக வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்கு உதவிவரவேண்டும். இந்த சிபார்சும் ஹாட்ஸ்பிரிங்ஸ் மகாநாட்டின் முடிவை ஒட்டியது.

ஸ்டீட்: இது ஆசியா பூராவுக்கும் அன்வயிக்கும் அல்லவா?

ஸர் ஜான்: ஆம். உலகத்தின் ஜனத்தொகையின் பாதிக்குமேலானதும், ஆசியாவின் ஜனத்தொகையின் 75 சதவிகிதம் உள்ளவர்களான ஜனங்கள் ஆரோக்கியத்துக்கு மிகக் குறைவாகஉள்ள உணவுப்பொருளை உட்கொள்ளுகிறார்கள். நிர்வாகம்தான் அதன் பிரஜைகளுக்கு நல்ல ஆகாரத்தை வழங்குவதில் முதல்தரமான பொறுப்பை எடுத்துக் கொள்ளவேண்டும்.

ஸ்டீட்: இது ஜன சமூகக் கொள்கையை ஆதரிப்பதாக ஆகுமென்று சிலர் நினைக்கிறார்கள்.

ஸர் ஜான்: இது பகுத்தறிவைக் காட்டுகிறது. இந்தியாவிலுள்ள இந்த மகத்தான பிரச்னை உலகம் பூராவுக்கும் ஒரு சவாலை விடுக்கிறது. நேசதேசத்தார்கள் ஹாட்ஸ்பிரிங்ஸ்

மகாநாட்டில் இந்த சவாலை ஏற்றுகொண்டுவிட்டார்கள். எல்லோருக்கும் ஆகாரமின்மையை ஒழித்து சுதந்திரம்பெற உலகத்திலுள்ள எல்லா தேசங்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று அவர்கள் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

கர்னல் நார்மன் வாக்கர்: இந்தியாவிலுள்ள எல்லா ஜாதியார்களும் இதில் ஒத்துழைப்பார்கள் என்று நம்பலாம்.

ஸ்மீட்: இந்தியா கவர்ன்மெண்டுதான் பூரா பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். மத்திய நிர்வாகத்தில் பிரிடிஷார்கள் இருந்தாலும் சரி அல்லது இந்தியர் இருந்தாலும் சரி நாம் கீழ்க்கண்ட முடிவுக்கு வந்திருக்கிறோம். இந்திய ஜன சமூக வாழ்க்கையில் போஷணைக்குறைவு ஒரு மகத்தான கெடுதல். அனேக பாகங்களில் பால் ஸப்ளை அதிகரிக்கப்படவேண்டும். பால் ஸப்ளையைப்போல நல்ல தண்ணீர் வசதியும் அளிக்கப்படவேண்டும். காய்கறிகளும் பழவர்க்கங்களும் பயிரிடப்படவேண்டும் அல்லது மிகுதியாக ஜனங்களுக்கு கிடைக்கவேண்டும். ஜனங்கள் அவைகளை உட்கொள்ள வேண்டும். நிலங்களின்மேல் ஜனத்தொகை அதிகரிப்பினால் ஏற்பட்ட பளுவைக் குறைக்கவும், தொழிலாளர்கள் நல்ல ஊதியம்பெற வசதி அளிப்பதன்மூலம் ஏழ்மைத் தனத்தைக் குறைக்கவும் தொழிற்சாலை அபிவிருத்தி மிகுதியாக கையாளப்படவேண்டும். இந்தப் பிரச்னைகளைத் தீர்க்க மகத்தான அபிவிருத்தி திட்டங்கள் நிறுவப்படவேண்டும். நமது சர்ச்சையிலிருந்து விஷயம் தெளிவுபட்டிருந்தால் நமது சர்ச்சை உபயோகமுள்ளதாக இருக்கும்.

யுத்தப் பாடல்.

ஜப்பானின் தயக்கம்.

(*By Mr. P. Maria Michael Pillai, Head Master, S. S. Killukkottai.*)

ஜாதி ஏதையா என்ற மெட்டு.

சொல்லுவேன் புவியோரே—ஜப்பான்
குள்ளனை யறிவீரே—விபரமாய் (சொல்லு)

1. தொல்லுலகானதில் சீனாவின் கிழக்கே பஸிபிக் சமுத்திரமே—சூழ்ந்த
எல்லையின் நடுவே தெரிகின்ற தீவே ஜப்பான் நாடாமே—தோற்றத்தில்
சொற்ப உருவாமே—விஷமத்தில்
அப்பா பெரிதாமே—தெரியுமோ (சொல்லு)

2. கள்வனை ஒருக்கால் நம்பினும் நம்பலாம் குள்ளனை நம்பாதே—என்ற
கதையைப் போலாச்சுதே ஜப்பானின் செய்தி காரணம் நம்மீதே—எதிரியாய்
மாறினான் மண்மீதே—இதைவிட
வேறென்ன பெருஞ்சூதே—இப்போதே (சொல்லு)

3. மூர்க்கமாய் ஹிட்லர் யுத்தமே தொடுத்தான் மேல்நாடெங்கிலுமே—பதில்
தாக்குதல் புரிந்திடவே பிரிடிஷார் தொடுத்தார் பெரும் யுத்தமே—செய்தி
விடுத்தார் புவியெங்குமே—உதவி
கொடுத்தார் பலரங்குமே—நாளுமே (சொல்லு)

4. இது நல்ல தருணமென்றெண்ணி ஜப்பான் எழுந்தானே போர் புரிய—தனக்கு
எதிரிலே தோன்றிய தீவுகள்மேல் படை எடுத்தானே விரைவாக—பல ஊர்கள்
பிடித்தானே மகிழ்வாக—அனேகரை
மடித்தானே உயிர்போக—தெளிவாக (சொல்லு)

5. சிங்கமில்லாத காலத்தில் குகையில் சிறுநரி புகுந்ததுபோல்—திடுமென
சிங்கப்பூர் மலாக்கா தாய்லண்டு பர்மா தேசங்கள் ஜெயித்தானே—பிரிடிஷ்
நேசத்தைப் பகைத்தானே—கெடுமதி
மோசத்தை விதைத்தானே—நானே (சொல்லு)

6. அமெரிக்கா பிரிடன் ரஷ்யா சேர்ந்து அழிக்குதே ஜெர்மனியை—நன்றாய்
அடக்கிய பின்னர் ஜப்பானை ஒடுக்கிட அதிவேகமாய் வருமே—அப்போ
மனந்தடுமாறிடுமே—ஜப்பான்
மிகத்துயர் பூண்டிடுமே—வேணுமே (சொல்லு)

7. அகங்காரம் படைத்த ஹிட்லரை நம்பி அமர்தனைத் தொடுத்தேனே—இப்போ
ஆடு திருடிய கள்வன்போல் விழிக்கிறான் ஐயோ பரிதாபம்—பிரிடிஷ்
சிங்கத்தின் கடுங் கோபம்—இனிமேல்
தீருமோ மனஸ்தாபம்—கேளும் (சொல்லு).

தஞ்சாவூர் உபரி அஸிஸ்டெண்டு ரிக்ரூட்டிங் ஆபீஸரான சுபதார் G. லோகநாதனின் 1944-ம் டிஸம்பர் மாதத்திய சுற்றுப்பிரயாண நிகழ்ச்சி.

12—12—44	செவ்வாய்க்கிழமை	புதுக்கோட்டைக்கு விஜயம்	ரிக்ரூட்மெண்ட்—தங்குவது.
13—12—44	புதன்கிழமை	ஆலங்குடிக்கு விஜயம்	ரிக்ரூட்மெண்ட்—புதுக்கோட்டையில் தங்குவது.
14—12—44	வியாழக்கிழமை	அரந்தாங்கிக்கு விஜயம்	ரிக்ரூட்மெண்ட்—அங்கேதங்குவது.
15—12—44	வெள்ளிக்கிழமை	புதுக்கோட்டைக்கு விஜயம்	ரிக்ரூட்மெண்ட்—தங்குவது.
16—12—44	சனிக்கிழமை	தஞ்சாவூருக்குத் திரும்புவது.	

புதுக்கோட்டையில் ரிக்ரூடிங் ஆபீஸர் முசாபுரி பங்களாவில் முகாம் செய்வார்.

'வி' டயரி-1945.

(குறிப்பு புஸ்தகம்).

லினன் ரூ. 1—8—0; ஷீப்ஸ்கின் ரூ. 1—12—0; மொராக்கோ ரூ. 2—4—0.

தபால் செலவு (பிரத்தியேகம்) :—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில் முதல் காபிக்கு ரூ. 0—4—3

அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணா.

காபிகளுக்குமுந்துங்கள்! ஸ்டேட் அச்சாபீஸில் விற்பனைக்குக் கிடைக்கும்.

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கோள்ளலாம் :—

காரியதரிசி,
தேசீய யுத்த முன்னணி நிலயம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 226 (6-வது பிரிவு).

2-12-44	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00
3-12-44	ரேனூர்	... ,,	7.00
,,	நாஞ்சூர்	... ,,	7.30
4-12-44	குடுமியாமலை	... ,,	7.00
,,	பரம்பூர்	... ,,	7.30
5-12-44	பெருங்களூர்	... ,,	7.00
,,	ஆதனக்கோட்டை	... ,,	7.30
6-12-44	உடையாளிப்பட்டி	... மாலை	7.00
,,	கிள்ளுகோட்டை	... ,,	7.30
7-12-44	மிரட்டுநிலை	... ,,	7.00
,,	அரிமளம்	... ,,	7.30
8-12-44	பொ. புதுப்பட்டி	... ,,	7.00
,,	வேந்தம்பட்டி	... ,,	7.30

பிரஸங்கம் 227. (1-வது பிரிவு).

9-12-44	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00
10-12-44	பூவரசகுடி	... ,,	7.00
,,	வேங்கடக்குளம்	... ,,	7.30
11-12-44	வெங்களூர்	... ,,	7.00
,,	கோனுபட்டு	... ,,	7.30
12-12-44	அண்டக்குளம்	... ,,	7.00
,,	கிள்ளனூர்	... ,,	7.30
13-12-44	குழிபிரை	... மாலை	7.00
,,	செவலூர்	... ,,	7.30
14-12-44	பனையப்பட்டி	... ,,	7.00
,,	ராங்கியம்	... ,,	7.30
15-12-44	கொடும்பாளூர்	... ,,	7.00
,,	விராலூர்	... ,,	7.30

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

2—12—44	பொன்னமராவதி.
3—12—44	விராச்சிலை.
5—12—44	பேராம்பூர்.
7—12—44	குழிபிரை.
8—12—44	புதுக்கோட்டை.
9—12—44	திருமெய்யம்.
10—12—44	கீத்தான்விடுதி.
12—12—44	வடகாடு.
14—12—44	கீழாநிலை.
15—12—44	புதுக்கோட்டை.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—7-12-44.